ISSN 1391-9

# Vijey விஜய் விஜய்

23.06.2010 - மலர் 07, இதழ் 16

## ராஜ பரம்பரையின் அரண்மனைகள்

## க.பொ.த (உ/தர) பொதுப் பரீட்சை வினாத்தாள்....




## பிள்ளைகளின் போஷாக்கு மட்டம்

## மனிதனுக்கு நெருக்கமான யானைகள்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல் கடந்து வந்த குருவானவர்

ஒல்லாந்தார்கள் அன்று கத்தோலிக்கர் க்கு புதிய ஆணைகள் பலவற்றைப் பித்தனர். அதாவது, அவர்களின் பாலயங்களில் மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளையும் ஒல்லாந்த பாலயங்களில் வந்து மேற்கொள்ள ண்டும் என்பதும் பிள்ளைகள் ஒல்லாந்த தைக் கற்க வேண்டுமென்பதுமே. மாத்திரமல்ல இறந்தவர்கள் தொடர் சமயச் சடங்குகளையும் ஒல்லாந்த டச்சு சீர்திருத்த திருச்சபையின்படியே கொள்ள வேண்டும் என்றும் சட்டம் பித்தனர். அத்தோடு, கத்தோலிக்க த்தைப் பின்பற்றும் சிங்களவர் மற்றும் ர்த்துக்கேயரிடையே பிரிவினையை டுத்தவும் முயற்சித்தனர்.

கி.பி 1659 இல் அவர்களின் பிரதேசத்தில் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றுவதைத் தடை செய்தனர். ஒல்லாந்தர்களின் அடிமைகளாக அவர்கள் அனைவரும் ஒல்லாந்த மொழியைக் கற்கவேண்டும் என்றும் கட்டளையிட்டனர். அவ்வாறு செய்யாவிட்டால் கடுந்தண்டனைகளை வழங்கினர். எவ்வாறு இருந்தபொழுதிலும் இந்தக் கட்டளைகளை முறையாக நடைமுறைப்படுத்துவது மிகவும் சிரமமாக இருந்தது. சட்டம் எவ்வாறு இருந்த போதிலும் ஒல்லாந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த சிலர் தொடர்ந்து போர்த்துக்கேய மொழியையே பேசினர்.

எத்தகைய தண்டனைகளை விதித்தாலும் போர்த்துக்கேய வழித்தோன்றல்கள் வெளிப்படையாகவே கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றினர். அதனால், அவர்கள் அனுபவித்த கொடுமைகளும் துன்பதுயரங்களும் சொல்லும் தரமன்று. அந்த அளவிற்கு துயரங்களை அனுபவித்தனர். இவர்களில் கத்தோலிக்க மதத்தை ஏற்றுக்கொண்ட தமிழர்கள் மற்றும் சிங்களவர்களின் தொகையோ அதிகமாகும். அதனால், பலாத்காரமாகவோ, அச்சுறுத்தியோ, சித்திரவதைகளை வழங்கியோ கத்தோலிக்க மதத்தை கைவிடச் செய்ய அவர்களால் முடியாமல் போனது.

அதன்பின் ஒல்லாந்தர் அவர்களுக்கு கத்தோலிக்க மதத்தைக் கைவிட்டு ஒல்லாந்த மதத்திற்கு மாற பல சலுகைகளை வழங்க முன்வந்தனர். எனினும் கத்தோலிக்கர்களை அவர்கள் மதத்தில் இருந்து மாற்றுவதற்கு ஒல்லாந்தரால் முடியாமல் போனது என டெனன்ட் எனும் வரலாற்றாசிரியர் குறிப்பிடுகிறார்.

இலங்கையில் கத்தோலிக்கருக்கு ஏற்பட்ட கொடுமைகளைக் கேள்விப்பட்ட வெளிநாடுகளில் உள்ள கத்தோலிக்கர் மிகவும் வேதனை அடைந்தனர். அதனால், துணிவுமிக்க குருவானவர்கள் பலர் இந்நாட்டிற்கு விஜயம் செய்தனர். அத்தகையவர்களில் முக்கியமானவராக கொங்கனி பிராமணரான தென் இந்திய கோவா ஒரடோரியன் வகுப்பைச் சார்ந்த கத்தோலிக்க குருவானவரான ஜோசப்வாஸ் அவர்களைக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ/தரம், புலமைப்பரிசில் பரீட்சைகள்:

# தேவைப்படும் மாணவர்களுக்கு இம்முறையும் விசேட வசதிகள்

இவ்வாண்டில் க.பொ.த. உ/தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்ற இருக்கின்ற மாணவர்களிடையே விசேட வசதிகள் தேவைப்படும் மாணவர்கள் எவரேனும் இருப்பின், அவர்களுக்கான வசதிகளைச் செய்துகொடுக்க பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதன்படி; செவிப்புலன் குறைபாடு, பார்வைப்புலன் குறைபாடு, கை-கால் தொடர்பான குறைபாடு உள்ளவர்கள் அல்லது இவை போன்ற வேறுபல நோய்களுக்கு ஆளாகியிருக்கின்ற விசேட வசதிகளை எதிர்பார்க்கும் பிள்ளைகள் ஆகியோருக்கு குறித்த பரீட்சை வினாத்தாள்களுக்கு விடையளிப்பதற்குத் தேவையான விசேட வசதிகள் செய்து கொடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதளவில் மேற்படி பிள்ளைகள் தொடர்பான விபரங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் பாடசாலை பரீட்சார்த்திகள் அதிபரூடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பெற்றோர்களினூடாகவும் குறித்த விபரங்களை பரீட்சைகள் திணைக்களத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இந்த விண்ணப்பப்படிவங்கள் ஜூன் 26 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கடந்த வருடம் உ/தரப் பரீட்சார்த்திகள் 100 பேருக்கும், சா/தரப் பரீட்சார்த்திகள் 200 பேருக்கும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சார்த்திகள் 25 பேருக்கும் மேற்படி விசேட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.வரலாற்றில் சங்கிலி மன்னன்



## வரலாற்றுத் தொடர்...

**யாழ்ப்பாண அரசின் கடைசித் தமிழ் மன்னனான 'சங்கிலி மன்னன்', போர்த்துக்கேயரை வெற்றிகொண்டதை விபரிக்கும் விறுவிறுப்பும் பரபரப்பும்கொண்ட வரலாற்றுத் தொடரை வாசிக்கத் தயாராகுங்கள்**

அடுத்த வாரம் தொடக்கம்
'விஜய்'யில் எதிர்பாருங்கள்...

# 2009 உ/தரப் பரீட்சைக்குத் தோற்றிய 100 பேரின் பெறுபேறுகள் இடைநிறுத்தம்

**2009 க.பொ.த உ/தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் தமது அடையாளத்தை உரிய முறையில் உறுதிப்படுத்தத் தவறிய 100 பேரின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.**

**இந்த மாணவர்கள் தொடர்பில் தற்போதளவில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த**



**விசாரணைகள் நிறைவடையும் வரை அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்பட மாட்டாதெனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.**

**பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ள மாணவர்களில் சிலர் பல்வேறு அடையாள அட்டைகளை சமர்ப்பித்துள்ளதுடன், இன்னும் சிலர் எந்தவொரு அடையாள அட்டையையும் சமர்ப்பிக்காமல் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# தரம் 13 இற்கான பாடநூல்கள், ஆசிரியர் கைநூல்கள் இதுவரை வழங்கப்படவில்லை

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்



புதிய பாடத்திட்டத்தின்கீழ் தரம் 13 இற்கான பாடநூல்கள் மற்றும் ஆசிரியர் கைநூல்கள் இதுவரை பாடசாலைகளுக்கு வழங்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் உயர்தர வகுப்புகளுக்காக புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு, அவ்வருடம் உ/தர வகுப்புகளுக்கு உள்வாங்கப்பட்டு தற்போது தரம் 13 இல் கல்வி கற்கும் மாணவர்கள் இதனால் பெரும் சிக்கல்களுக்கு முகம் கொடுத்திருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி, புதிய பாடத்திட்டத்திற்கமைவாக ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்படவோ, தெளிவுபடுத்தப்படவோ அல்லது கைநூல்கள் வழங்கப்படவோ இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

புதிய பாடத்திட்டத்தைப் பின்பற்றும் முதலாவது உயர் தர வகுப்பு மாணவர்கள் எதிர்வரும் வருடம் பரீட்சைக்குத் தோற்ற இருப்பதோடு, புதிய பாடத்திட்டத்தின்கீழ் முதல் தடவையாக நடைபெறவுள்ள இந்த பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் எதுவும் இதுவரை அ[...] வைக்கப்படவில்லை எனவும் பிரத[...] செயலாளர் மேலும் தெரிவித்துள்ள[...]

# இலவச சஞ்சிகைக்கு எழுதும் வாய்ப்பு



தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் இளம்பராயத்தினருக்காக வெளிவருகின்ற இலவச சஞ்சிகையான 'அப்பே லோக்கய' (நமது உலகம்) சஞ்சிகையின் 3 ஆவது இதழுக்காக மாணவர்களிடமிருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கதை, கவிதை, கட்டுரை, சித்திரம், துணுக்குகள், பொது அறிவு விடயங்கள் என ஆக்கங்கள் அமையலாம். கவிதைகள் நான்கு பந்திகளைக்கொண்டதாகவும் ஒவ்வொரு பந்தியிலும் ஐந்து வரிகள் அமையும் வகையிலும் இருத்தல் வேண்டும். ஆக்கங்களை 'அப்பே லோக்கய', இல-62, புவக் அரம்ப வீதி, கடலான, மொறட்டுவை என்ற முகவரிக்கு தபாலிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 071-5554111 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொள்ளவும்.

60 நாட்களில் ஆங்கிலத்தை கற்றுக் கொள்ளுங்க[ள்]
இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி
E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்
BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத.வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது. (வயது கட்டுப்பாடு தேவையில்லை)
60 நாட்கள் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.
இலவச T.Shirt ஒன்றும் Phone Sim English Book என்பன இலவசம்

பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும் 30 Easy way English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்
மேலதிக விபரங்களுக்கு பெயர்.முகவரியை 0777-220002 க்கு SmS செய்யுங்கள்
இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெற[...]
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி இலக்கை எவ்வாறு அடைவது?



அனைவருக்கும் வாழ்க்கையில் றி பெறவேண்டும் எனும் கனவு தும். பலருக்கு வாழ்வின் இறுதி வெற்றி என்பது வெறும் ாக மட்டுமே இருந்திருக்கிறது. மட்டுமே அதனை நனவாக்கி ன படைத்திருக்கின்றனர். ாட செலவுக்கு கையில் பண ாமல் தவித்த, அதுவும் சரியா டிக்காத பில்கேட்ஸ் இன்று ன் முதல்நிலை பணக்காரர் ஒருவராவார். ஓர் ஏழைக்குடும் ) பிறந்த அப்துல் கலாம் இந்தி ;கே ஜனாதிபதியானார். ஒரு ினத்தவரான பராக் ஒபாமா ரிக்க ஜனாதிபதியானார். ளெல்லாம் வெற்றியின் ங்கள்; வாழும் சரித்திரங்கள். படியானவர்களைப் பார்த்து பியக்கிறோம்; நாமும் இப்படி டியாதா என ஏங்குகிறோம். ல், நம்மாலும் அவ்வாறு ஆக மென்பதை நாம் உணர்வதில்லை.

சரி. வெற்றி பெறுவதற்கு என்ன தேவை என்று கேட்டால் அனைவரும் விடாமுயற்சி என்போம். ஆனால், விடாமுயற்சி இருந்தால் மட்டுமே வெற்றி பெற்று விடமுடியாது. ஒரு வீட்டைக் கட்டுவதானால் செங்கல்லை மட்டும் வைத்துக் கட்டி விடமுடியாது. அதுபோலத்தான் வெற்றி என்பது பல காரணிகளின் கூட்டுச்சக்தி ஆகும். விடா முயற்சி என்பது கட்டடத்தின் அத்திவாரத்தைப் போன்று வெற்றியின் அடிப்படைக் காரணி மட்டுமே. விடாமுயற்சி முக்கியத்துவப் படுத்தப்படுவதன் காரணம், தோல்விகள் ஏற்பட்டாலும் தொடர்ந்து முயற்சி செய் வதன் மூலமே வெற்றியை நோக்கிப் பயணிக்க முடியும் என்பதாலாகும்.

நூல்களைத் தொடர்ந்து வாசிப்பதன் மூலம் நமது அறிவைப் பெருக்கிக் கொள்ள முடியும். நூல்களை வாசிக்கப் பழகுவதா னது சரளமான வாசிப்புத் திறனையும் சிறந்த சிந்தனா சக்தியையும் ஞாபகத்திறனையும் தருவதோடு, அறிவு வளர்ச்சியில் பெரும் பங்களிப்பை நல்கும்.







பேச்சுவன்மையும் இங்கு முக்கி யம் பெறுகிறது. நாம் நினைப் பதை தைரியமாக சமூகத்தின் முன்வைக்க அனைவரையும் வசீகரிக்கும் அபார பேச்சாற் றல் இருக்குமானால் வெற் றியை நோக்கி செல்ல இலகு வாக இருக்கும்.

அடுத்து முன்னுணரும் திறன் மிக முக்கியமானது. எதிர்காலத் தைப் பற்றி ஓரளவு ஊகிக்கக் கூடிய திறன் இருந்தால்தான் வரக்கூடிய பிரச்சினைகளிலி ருந்து நம்மை தற்காத்துக்கொள் ளக் கூடியதாக இருக்கும். நம்மைச் சுற்றி நடக்கும் விட யங்கள், நம்மோடு பழகுபவர் களின் குணாதிசயங்கள் என்ப வற்றை உடனுக்குடன் அறிந்து கொள்வதுடன், விழிப்பாகவும் இருக்கவேண்டும். எந்தவொரு பிரச்சினையின்போதும் அவசரப்பட்டு முடிவெடுக்கா மல் அப்பிரச்சினையை ஆறப்போட்டு முடிவெடுக்கவேண்டும்.

ஒரு பிரச்சினையில் சிக்கித் தவிக்கும் போது நமது மனநிலையை வார்த்தை களால் வர்ணிக்க முடியாது. அந்தப் பரபரப்பான சூழ்நிலையிலும் பொறு மையுடன் செயற்படுபவர்களே உண்மையில் பாராட்டத்தக்கவர்களா வர். எந்தவொரு பிரச்சினையின் போதும் நாம் மேற்கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள் சில வருமாறு;

1. சம்பந்தப்பட்ட கருத்து/விடயம்/ பிரச்சினை தொடர்பான தெளிவான அறிவு/விளக்கம் தேவை.
2. விடயத்தின் உண்மையான பின்ன ணியை அறிதல்/சீர்தூக்கிப் பார்த்தல்.
3. அதற்கான தீர்வு வழிகளை இனங்காணல்.
4. மிகப் பொருத்தமான தீர்வினைத் தெரிவு செய்தல்.
5. அமுலாக்கம் செய்தல்.

இந்த தீர்வுத்திட்டத்தினை பிரச்சினை களைத் தீர்ப்பதற்கு மட்டுமென்று கருதா மல் வாழ்வின் இலக்கினை நிர்ணயித் தல், ஏதேனுமொரு விடயத்தை அறிய முற்படுதல், கட்டுரைகளை எழுதுதல் போன்ற பல்வேறு செயற்பாடு களுக்கும் பயன்படுத்த முடியும்.

மேலும், எந்தவொரு செய லையும் நாமாகவே முன்வந்து செய்யும் பண்பையும் வளர்த் துக்கொள்ளவேண்டும். நாம் எப்போதும் பிறரையே நம்பியி ருப்பதானது தவிர்க்கப்பட வேண்டியதாகும். ஏதோ பிறந் தோம் இறந்தோம் என்று வாழ் வதல்ல வாழ்க்கை. ஏதாவ தொன்றைச் சாதிக்கவேண்டும்.

எனவே, நமது எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்பதற்கான பாதை எவற்றை நோக்கியதாக இருக்கும் என்பதை மிகச்சரி யாக இனங்கண்டு, அதில் பய ணித்து, உலகின் வெற்றிகர மான சாதனையாளராக மிளிர்வோமாக. திறமையில் முழுமையாக நம்பிக்கையை வைத்தால் வெற்றி நிச்சயம். நாளை நமதே.

-சிகரம் பாரதி, கொட்டகலை.

# மாணவன் நஸ்ஹானின் 'சிப்பிக்குள் முத்து' நூல் வெளியீடு




பலிமடை சில்மியாபுரம் -முர்ஷித்' மகா வித்தியாலயத் ரம் 7 இல் கல்வி பயிலும் ஹமத் நஸ்ஹானின் ிக்குள் முத்து' என்ற சிறுகதை தப்பு நூல் கிடைக்கப் றுள்ளது.

ம் 7 இல் கல்வி கற்கின்ற ஒரு வன் இந்த இளவயதில் கல்வி ) சமகாலத்தில் இவ்வாறான த் தொகுப்பொன்றை வெளி ள்ளமை பாராட்டத்தக்கது. ான்றை வெளியிடுவதாயின் ட்டங்களைத் தாண்டியே இலக்கினை அடையமுடியும். ப்புப் பழக்கம், கற்பனை வளம், தன்னம்பிக்கை, எழுதும் ஆர்வம், பின்னர் அதனை நூலாக்குதல் என்ற படிக்கட்டுக்களைத் தாண்டியே அந்த இலக்கை அடையமுடியும். மாணவன் மொஹமத் நஸ்ஹான் அந்த இலக்கை அடைவதில் இரட்டிப்பு சாதனையை ஏற்படுத்தியுள்ளார். காரணம் சிறுபராயத்திலேயே அதனை அவர் செய்திருப்பதுதான்.

சின்ன தம்பி, தங்கைகளைக் கவரும் வகையில் சுவாரஸ்யமான குட்டிக்கதை களை அழகாக அவர் படைத்துள்ளார். படிப்பினை, புத்தி புகட்டல், நன்றி மறவாமை போன்றவற்றை உள்ளடக்கி யதாக இந்தக் கதைகளை நஸ்ஹான் நேர்த்தியாக அமைத்துள்ளார்.

இந்த நூலுக்கு 'சிப்பிக்குள் முத்து' என்று பெயரிடப்பட்டுள்ளமை பொருத்தமாகவே அமைந்துள்ளது. கதைகள் முத்தாக இருப்பதால் அதனை எழுதிய மொஹமத் நஸ்ஹானும் முத்தாகவே ஜொலிக் கிறார். தொடர்ந்து இவ்வாறான படைப்புக்களை படைக்க அவருக்கு எமது வாழ்த்துக்கள்.



மாணவன் மொஹமத் நஸ்ஹான் எழுதிய 'சிப்பிக்குள் முத்து' சிறுகதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக ஊவா பிரதேச சபை உறுப்பினர் எஸ்.ஏ.ஆர்.பந்துசேன கலந்து சிறப்பித்ததுடன், மேலும் பல விசேட அதிதிகளுடன் ஏராளமானோர் கலந்து கொண்டனர். நூல் வெளியீட்டு விழாவில் பிடிக்கப்பட்ட சில படங்களை இங்கு காணலாம். (படங்கள்: - வாஹிட் குத்தூஸ், பதுளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்றல் சிறப்பாக அமைய...

**6. கற்றல் தூண்டல்:**

தூண்டல் என்பது துலங்கலுக்கான முன்னோடியாகும். ஒருவனது கற்கும் திறன் அவனுக்கு கிடைக்கும் தூண்டலைப் பொறுத்து அமைகிறது. ஒருவன் சிறப்பாகக் கற்க வேண்டும் என்றால், முதலில் அவனுக்கு நல்ல தூண்டல் அமைய வேண்டும். பெற்றோரும் ஆசிரியர்களும் அவனிடம் கற்றலில் ஆர்வம் வளரும் வண்ணம் அவனைத் தூண்டக்கூடிய



# கல்வி



## முகாமைத்துவம் - 08

## கற்றலுக்கான ஆலோசனைகள்

சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இத்தகைய வலுவான தூண்டலின் அடிப்படையில் மாணவர்களிடையே ஏற்படும் எதிர்வினை தான் கற்றலாக அமைகிறது. தூண்டல் சரியாக இல்லையெனில், எதிர்வினை அல்லது துலங்கல் மாணவனிடம் ஏற்படாது.

**7. மேலதிகக் கற்றல்: (Over learning)**

நீண்ட காலத்திற்கு முன்னர் கற்ற ஒரு விடயத்தை மறந்திருந்தாலோ அல்லது சரியாக அறியப்படாமல் இருந்தாலோ மீண்டும் கற்றுக்கொள்ளல். முன்னைய பழக்கம் மறந்த நிலையில் இருந்த காரணத்தால் மீண்டும் மீண்டும் அதிகமாக கற்பதை இது குறிக்கிறது.

**8. முழுமையாகவும் பகுதியாகவும் கற்றல்: (Whole and Part learning)**


முதலில் உரிய விடயம் பற்றிய முழுத் தோற்றத்தையும் (big picture) அறிந்திருந்து, பகுதி பகுதியாகக் கற்பதானது கற்றலில் சிறந்த முறையாகும். படிக்கவேண்டிய விடயம் மிக விரிவாகவும் நீண்ட காலம் எடுக்கக்கூடியதாகவும் இருக்கும்போது, பகுதி பகுதியாகக் கற்றல் மிகவும் சிறப்பானதும் விளங்கக்கூடியதாகவும் இருக்கும்.

**9. வினா, விடையுடன் தொடர்புபடுத்திக் கற்றல்:**

நாம் ஒரு விடயத்தை சரியான முறையில் கற்றுக்கொள்வதற்கு அவ்விடயம் விடையாக அமையுமாறு சிறு வினாக்களை எழுப்பிக் கற்றுக்கொள்ளலாம். கற்ற விடயத்தை சுருக்கி-விளங்கி, சுருக்கமான வினா-விடை என்ற மாதிரியில் கற்றலும் இலகுவானதாகவும் படிமுறையானதாகவும் அமையும்.

**10. கற்றதை மீண்டும் நினைவுபடுத்தல்: (Remembering)**

ஒரு விடயத்தை ஒரு முறை படித்து விட்டு அப்படியே விட்டுவிட்டால் நாட்கள் நகர, நகர அது மறந்து போகும். இது அனைவருக்கும் ஏற்படக்கூடிய பிரச்சினையாகும். இதனைத் தீர்க்க ஒரு விடயத்தைக் கற்ற பின்னர் அது மறந்த நிலையில் அதை நினைவுபடுத்தி மீண்டும் கற்க வேண்டும். இவ்வாறு அடிக்கடி நினைவுபடுத்தினால் மறதியை இல்லாமல் செய்யலாம்.




கற்றல் என்பது கடினமான விடயமாகக் காணப்பட்டாலும், அதை அதற்கு உரிய ஒழுங்கில் சரியாகவும் நேர்த்தியாகவும் செய்து வந்தால், கற்றலானது இலகுவாக அமையும். இவ்வாறான சுருக்க வழிகளையும் நுட்ப முறைகளையும் பயன்படுத்தி, கற்றலைச் செயற்படுத்தினால் கற்றலின் விளைவு நன்றாக அமையும் என்பது உறுதி.



(தொடரும்...)

-எம்.ஏ.எஃப்.

# கடல் நீர் நீல நிறமாக உள்ளது... ஏன்?

வானத்தில் காணும் நீல நிறத்தின் பிரதிபலிப்பே கடலின் நீல நிறத்துக்குக் காரணம். வானவில்லின் ஏழு வண்ணங்களில் ஒவ்வொன்றும் வெவ்வேறு அலைநீளம் (Wavelength) அதிர்வு (Frequency) என்பவற்றைக் கொண்டவை.

ஒளியானது வளிமண்டலத்தில் பயணிக்கும் போது காற்றிலுள்ள அணு மூலக்கூறுகள், நீர்த் துளிகள், பனிமூட்டம், மேகங்கள் போன்றவை ஒளியைச் சிதறடிக்கின்றன. இதற்கு 'ரேலே சிதறல்' (Rayleigh Scattering) என்று பெயர். அதன்படி, மிகக் குறைந்த அலைநீளம் கொண்ட நீல நிறம் மிக அதிகமாகச் சிதறடிக்கப்படுவதால், வானம் நீல நிறமாகத் தெரிகிறது. அந்த நீலத்தைத்தான் கடலானது கண்ணாடி போல் பிரதிபலிக்கின்றது. நீல நிறத்தின் அலைநீளம்தான் மிகக் குறைவானது. அது 4.500 ஆங்ஸ்ட்ரோம் அலகு ஆகும். சிவப்பு நிறத்தின் அலைநீளம் தான் மிக அதிகம். அது 6.500 ஆங்ஸ்ட்ரோம் அலகு ஆகும்.



அவ்வாறாயின்; ஆறு, ஏரி, குளம் போன்றவற்றில் ஏன் இந்த பிரதிபலிப்பு நிகழ்வதில்லை? என்ற கேள்வி எழலாம். அதிக ஆழம் மிகுந்த நீர்நிலைதான் வானின் நீலத்தைப் பிரதிபலிக்கும். அதனால்தான் ஆழம்மிக்க, நிதானமாக ஓடும் நீர்நிலை நீல நிறமாகத் தோன்றுகின்றன. மாறாக, எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும் நீர்நிலைகளில் இந்த வண்ணப் பிரதிபலிப்புக்கான வாய்ப்பு மிகக் குறைவு.

# வண்ண(த்து)ப் பூச்சி

எமது சுற்றுச்சூழலில் பல்வேறு நிறங்களில் பறந்து திரியும் வண்ணத்துப்பூச்சிகள் பார்ப்பதற்கு மிக அழகானவை. வண்ணத்துப்பூச்சிகள் என்றதும் எமது நினைவுக்கு வருவது, அவை பூக்களில் அமர்ந்து தேன் பருகும் காட்சியே. அழகான வண்ணத்துப்பூச்சிகள் பற்றிய சில சுவாரஸ்ய தகவல்கள் இதோ....

வண்ணத்துப்பூச்சியின் வண்ணக்கலப்புடனும் வேலைப்பாடுகளுடனும்கூடிய இறக்கைகள் மிகவும் மிருதுவானவை. இதனால், அவை ஒளியை ஊடுருவும் தன்மைகொண்டவையாக இருக்கின்றன. அத்துடன், அதன் இறக்கைகளைக் கையால் பிடிக்கும்போது அழுத்தாமல் மென்மையாகப் பிடிக்க வேண்டும். இல்லாவிடின், அது உடைந்துவிடும் வாய்ப்புள்ளது.

இதன் வாய்ப்பகுதி மெல்லிய குழாய் (straw) போன்றிருக்கும். அதன்மூலம் பூக்களில் உள்ள தேனை அது உறிஞ்சி குடிக்கும். எனினும், சுவை மொட்டுக்கள் அதன் கால்களிலேயே அமைந்திருப்பதால், வண்ணத்துப்பூச்சிகள் தேனின் சுவையை கால்களினூடாகவே சுவைக்கின்றன.

கம்பளிப்பூச்சி தன் சருமத்தை உதிர்த்து கூட்டுப்புழுவாக மாறும்போது அது தன்னைச் சுற்றி ஒரு கூட்டை அமைக்கும். அந்தக் கூட்டிலிருந்தே நாளடைவில் வண்ணத்துப்பூச்சி உருவாகின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புராதன காலந்தொ
# நண்பனாக இருந்த




ஹூலி மெமத்

**சர்வதேச உயிரியல் பல்வகைமை வருடத்தில் கால் பதித்துள்ள நாம், உயிரினங்கள் பற்றிய தெளிவுகளை அவ்வப்போது ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொள்ளும் இக்காலகட்டத்தில், உருவத்தில் பெரிய மிருகமாக மதிக்கப்படும் யானைகள் பற்றிய கண்ணோட்டமாக இக்கட்டுரை அமைகின்றது.**

வரலாற்றில் யானைக்குத் தனிச்சிறப்புண்டு. இஸ்லாத்தின் இறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் பிறந்த ஆண்டுகூட 'யானை வருடம்' என்று அழைக்கப்படுகின்றது. அந்தவகையில், ஆமை ஒன்றின் மீது நிற்கும் நான்கு யானைகளால் அரைக்கோள வடிவ பூமி தாங்கப்பட்டுள்ளது என்பதும் பூமி பற்றிய இந்துக்களின் கருத்துக்களில் ஒன்றாகும். இலங்கை-இந்திய வரலாறுகளிலும் இந்துக்களின் வழிபாட்டு முறைகளிலும் மற்றெல்லா மிருகங்களையும்விட யானைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்கலாம். அத்துடன், வரலாற்றில் மாத்திரமன்றி, இலக்கியத்திலும் யானைகள் முதலிடம் பிடித்திருப்பதை புராதனக் கவிதைகளிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம்.

## யானைகள் வீதிவலம்

இலங்கையில் புராதன காலம் தொட்டு கொண்டாட்டங்களின்போது யானைகள் முக்கிய இடம் பெற்றிருந்தன. அக்காலத்து மன்னர்கள் வீதி உலா வரும்போதும் அரசவைக்கு வரும்போதும் அலங்கரிக்கப்பட்ட யானைகளில் கம்பீரமாக அமர்ந்து வருவார்கள். வெற்றி விழாக்களின்போதும் ஊர்வலங்களின்போதும் யானைகளே முதலிடம் வகித்துள்ளன. இலங்கைக்கும் யானைக்கும் உள்ள தொடர்பு போலவே, பௌத்த சமயத்திற்கும் யானைக்கும் நெருங்கிய தொடர்புள்ளமை, ருவன் வெளிசாய கோபுர பிரகாரத்தில் உள்ள யானைகளின் கூட்டத்தொடரிலிருந்து அறிய முடிகின்றது. அநுராதபுரம், பொலன்னறுவைக்கால சந்திரவட்டக் கற்களிலும் யானை உருவம் காணப்படுகின்றது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ்,மலேசியா, ஜாவா, சுமாத்ரா போன்ற ஆசிய நாடுகளில் காணப்படும் யானைகளும் ஆபிரிக்க நாடுகளில் காணப்படுகின்ற யானைகளும் உருவத்தில் வித்தியாசப்படுகின்றன. எனினும், இலங்கை யானை இனம் மாத்திரம் இலங்கைக்கேயுரிய யானை இனமாகக் காணப்படுகின்றது.

தவிர, இலங்கை வனாந்தரங்களில் யானைகள் சுதந்திரமாக நடமாடி வாழ்கின்றன. சிலவேளைகளில், காட்டு யானைகள் அண்மையிலுள்ள கிராமங்களுக்குள் புகுந்து குடியிருப்புக்களைத் தாக்குவதும் உண்டு. இதனால், அவ்வப்போது யானை தாக்கி மரணங்களும் நிகழ்கின்றன. அத்துடன், மனிதர்கள் தோண்டி வைத்திருக்கும் குழிகளில் விழுந்தும், மனிதர்கள் தாக்கியும் காட்டு யானைகள் மரணமடைவதுண்டு.

## யானைகள் அருகிவரும் நிலை

தரையில் வாழும் மிகப்பெரிய முலையூட்டி ஆபிரிக்க யானையாகும். நன்கு வளர்ந்த ஆண் யானை 11 அடி உயரமும் 6 தொன் நிறையுமிருக்கும். அது ஒரு நாளைக்கு 700 இறாத்தல் தாவரத்தையும் 50 கலன் நீரையும் உட்கொள்ளும். இவை இன்னும் 15 வருடங்களில் அழிவடைந்துவிடும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக சர்வதேச விலங்குகள் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. யானைத் தந்தங்களைக் கடத்தும் முயற்சிக்காக யானைகள் கொல்லப்பட்டு வருவதே இதற்குரிய காரணமாகும். நாளொன்றிற்கு சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட ஆபிரிக்க யானைகள் கொல்லப்பட்டு வருவதாகவும், யானைத் தந்தங்கள் மூலம் செய்யப்படும் கத்திகள்,அரிவாள், கைப்பிடிகள், பூச்சாடி, பாசி மலைகள் ஆகியவற்றிற்கான அதியுயர் கேள்விகளே இதற்கான காரணமென்றும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு யானைகள் முற்றாக அழிவடைந்து செல்லும் நிலை ஏற்படின், நம் சந்ததியினர், நாம் இன்று டைனோசர்களைப் பார்ப்பதுபோன்று யானைகளைக் கற்பனைக் கண்கொண்டு பார்க்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம்.

இந்தவகையில், ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய கால கட்டத்தில் வூலி மெமத் (Woolly Mammoth) என்ற யானை பூமியில் வாழ்ந்துள்ளது. அது வாழ்ந்த காலத்தில் பூமியில் கடும் பனி நிலவியதாம். கடுங்குளிரைத் தாங்குவதற்கு ஏற்ற விதமாக இந்த யானையின் உடல் முழுவதும் கம்பளி மயிர் அடர்த்தியாக இருந்ததாகக் கூறப்படுகின்றது. சுமார் 14 அடி உயரம் கொண்ட இந்த 'மெமத்' யானைகள் வளைந்த நீண்ட தந்தங்களைக் கொண்டிருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்தக் கம்பளி யானைகள் வாழ்ந்த காலத்தில் பூமியில் வாழ்ந்த மனிதர்கள் இவற்றை வேட்டையாடியிருக்கின்றார்கள். அதனால், சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன், பனிக்கால முடிவில் இந்த யானை இனம் முற்றாக அழிந்து போய்விட்டதாகக் கூறப்படுகின்றது. இந்தவகை மெமத் யானை இனத்தின் முழு வடிவம், ஆர்க்டிக் பனிப்படலத்துக்குள் புதையுண்டிந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் உயிரணுக்களைக் கொண்டு இந்த யானை இனத்தை மீண்டும் உலகிற்குக் கொண்டுவரும் ஆராய்ச்சியில் அமெரிக்க விஞ்ஞானிகள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

## மகாபாரதத்தில் யானை

பாண்டவர்களும் கௌரவர்களும் புராதன காலத்தில் கங்கைநதி தீரத்தில் அமைந்திருந்த இராஜதானிக்கு அஸ்தினாபுரம் (யானையூர்) என்று பெயர் சூட்டி அழைத்தனர். இவர்கள் பாரதப் போரின்போது குருசேத்திரப் போர்க்களத்திற்கு ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு யானைப் படைகள் சென்றதாக மகாபாரதம் கூறுகிறது.

சாதாரண மனிதனை சர்வ வல்லமை மிக்க மன்னனாக ஆக்கிய பெருமையும் யுத்த காலத்தில் பேரரசர்களையும் பெரும் வீரர்களையும் தோற்கடிக்க உதவிய பெருமையும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்டு மனிதனுக்கு
# வரும் யானைகள்



யானைகளுக்கேயுரியவை. புருஷோத்தம மன்னன் எதிரிகளோடு போர் புரிந்த போதெல்லாம் யானைப் படைகளையே பெரிதும் நம்பியிருந்துள்ளான். ஒரு சமயம் மகா அலெக்சாண்டருடன் புருஷோத்தமன் போரிட்டபோது, அவனது யானைப்படைகளின் போர்த்திறனை முன்பே உணர்ந்திருந்த அலெக்சாண்டர் போர்க்களத்தில் முதலாவதாக யானைப்படைகளின்மீது பெரும் தாக்குதலை நடத்தியமையால் அவன் மிகச் சிறப்பாக புருஷோத்தமனை வெற்றிகொள்ள முடிந்ததாகவும் கூறப்படுகின்றது.

இராஜபுத்திரர் சரித்திரத்திலும் முதலில் அவர்கள் அடைந்த பல வெற்றிகள், முடிவில் தோல்விகளாக மாறியதற்கு யானைகளே காரணமாக இருந்ததெனத் தெரிகின்றது. இவ்வாறு பல சாம்ராஜ்யங்களின் அஸ்தமனத்துக்குக் காரணமாக இருந்த யானைகள் சில சமயம் நன்றியோடு நடந்து கொண்டதுமன்றி, வியத்தகு செயல்களையும் புரிந்துள்ளன.

## யானையின் நன்றியுணர்வு

கோவாவில் ஒரு யானை வெறிபிடித்து வீதியால் பிளிறிக்கொண்டு ஓடியது. எதிரே காண்பவர்களையெல்லாம் காலால் மிதித்தும் தும்பிக்கையால் தாக்கியும் துவம்சம் செய்து கொண்டு போகையில் ஒரு யானைப்பாகனின் குழந்தை நடுவீதியில் அழுதுகொண்டு நின்றது. அந்தக் குழந்தை யானைப்பாகனான அதன் தந்தையுடன் வந்து பல தடவைகள் அந்த யானைக்குப் பழங்கள், இலை, குழைகளைக் கொடுத்துள்ளது. ஓடிவந்த யானை அந்தக் குழந்தையைத் தனது தும்பிக்கையால் நாசூக்காகத் தூக்கி அருகிலிருந்த வீட்டுத் திண்ணையில் இருத்தி விட்டுத் திரும்பியபோது, அந்தக் குழந்தையின் தாய், 'ஐயோ என் குழந்தை' என்று கதறிக்கொண்டு வருவதைப் பார்த்து மறுபக்கமாகத் திரும்பி ஓடியதாம். இந்தச் சம்பவம் போர்த்துக்கேய சரித்திராசியர் லின் சோடன் என்பவரால், 'இந்து தேச வரலாறு' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மொகலாயரின் காலத்தில் சண்டை- சமாதானம் ஆகிய இரண்டு நிலைகளுக்கும் யானைகள் மிகவும் உதவி புரிந்திருக்கின்றன. மொகலாய மன்னன் பௌர்ணமி நாட்களில் யானைமீது ஊர்வலம் வந்து, பொற்காசுகளை மக்களுக்கு அள்ளிவீசும் வழக்கத்தைக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. இக்காலப்பகுதியில் தூரப் பிரயாணங்களுக்கும் யானைகளே உதவியாயிருந்துள்ளன. இராஜகுமாரிகளும் அந்தப்புரத்து சீமாட்டிகளும் யானையின்மேல் அம்பாரியில் அமர்ந்து கொண்டோ அல்லது சயனித்துக் கொண்டோ செல்வார்களாம். சிலவேளைகளில் பாரிய வெள்ளிமணி கட்டிய இரண்டு யானைகளுக்கு நடுவில் பட்டினால் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் பயணம் செய்வதுமுண்டாம்.

'மலைபோன்ற பெரிய யானையின் மேல் நவரத்தினங்களாலான அம்பாரியில் றோஸனாரா பேகமும், அவளது அந்தரங்கத் தோழியரும் அவர்களின் பின்னே ஆறு யானைகளின் மேல் பேரழகு பெற்ற பணிப்பெண்களும் உட்கார்ந்து செல்லும் காட்சியானது மேக மண்டலத்துத் தாரகைகள் கூட்டத்தில் பூரண நிலவு தவழ்ந்து செல்வதைப் போலிருக்கும்' என்று பெர்னியன் என்ற யாத்ரீகன் வர்ணித்துள்ளான்.

## வெற்றிகளுக்குக் காரணமான யானைகள்

அவுரங்கஷிப் அடைந்த பல வெற்றிகளுக்கும் யானைகளே காரணமாக இருந்துள்ளன. அக்பர் சக்கரவர்த்திக்கு யானை என்றால் உயிர். அவருக்கு யானைகளுடன் விளையாடுவதென்றால் மிகவும் பிடிக்குமாம்..அவர் காபூலிலிருந்து இந்தியாவுக்கு வந்த பின்னர் இப்பழக்கம் அவருக்கு ஒரு விசித்திர விளையாட்டாக மாறியதாம். ஒரு துஷ்ட யானையின் மீது அமர்ந்துகொண்டு அதை மற்றொரு யானையோடு மோத விடுவாராம். அவரது யானை மிகவும் மூர்க்கத்தனமாக மற்ற யானையுடன் மோதி, அதனை மிதிப்பதைக் கண்டு சக்கரவர்த்தி சந்தோஷப்படுவாராம். போர்க்காலங்களில் யானைகள் அவருக்கு மிக உபயோகமாக இருந்திருக்கின்றன. யானைப்படை ஒன்றையே அவர் பாதுகாத்து வந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அத்துடன், ஜஹாங்கீர் சக்கரவர்த்தியின் காவற் படைகளில் ஒன்றாக யானைப்படை இருந்ததாகவும் அவை புரிந்த சாகசங்கள் பற்றியும் கி.பி 1611 இல் ஆக்ராவுக்கு வந்து சென்ற ஆங்கிலேயரான ஜோன் ஜுர்டேன் தனது நூலொன்றில் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

மேலும், யானையைப் பரிசாக வழங்குவதை அந்தக் காலத்தில் கௌரவமாகக் கணித்தனர். ஆனால், தண்டனையாகவும் யானைகள் கொடுக்கப்பட்டுள்ளன. செல்வந்தனொருவனுக்கு யானையொன்று பரிசாகக் கொடுக்கப்பட்டால் அதனை அவன் மிக இலகுவாகப் பராமரித்துக் கொள்வான். ஆனால், வசதியற்ற ஏழைக்கு யானை பரிசளிக்கப்பட்டால் அதனைப் பராமரித்துக் கொள்வதில் அவன் கஷ்டப்படும் நிலை ஏற்படுகின்றது. அதுவே, அவனுக்குத் தண்டனையாகவும் அமைந்துவிடுகின்றது.

2000 ஆண்டுகளுக்கு முன் காபூல், பஞ்சாப் ஆகிய மாநிலங்களை ஆண்ட மன்னன் மொனாண்டர் உயரமான மலைகளின் மேலிருந்து யானைகளை உருட்டிவிட்டு, அவை மரண அவஸ்தைப்பட்டு, பிளிறிக் கொண்டு இறப்பதைக் கண்டு மகிழ்வானாம். விஜய நகர மன்னர்கள் மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளை யானை முன் நிறுத்தி, அந்த யானை அவனை மிதித்து கோரமாகக் கொலை செய்வதைக் கண்டு உவகையடைவார்களாம்.

வேதகாலத்தில் ஒரு நாட்டில் தலைவனாகத் தேர்ந்தெடுப்பதற்கு அந்நாட்டு பட்டத்து யானையைப் பயன்படுத்துவார்களாம். யானையை நீராட்டி, சீருடை அணிவித்து, அதன் தும்பிக்கையில் பூமாலையைக் கொடுத்து வீதியில் உலா வரச்செல்வார்களாம். யானை யாருக்கு மாலையிடுகின்றதோ, அவனை அல்லது அவளைப் பட்டத்திற்குரியவராகத் தேர்ந்தெடுப்பார்களாம்.





-செம்மைத்துளியா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


...த்தக நகரம் பொய்ன்ட் நொயர்
பொய்ன்ட் நொயர் துறைமுகத்தின் ஆகாயவழிக் காட்சி
ப்ரெஸாவில்லே நகர்

# கொங்கோ குடியரசு

வாரம் ஒரு நாடு


தேசிய இலச்சினை

...ரசு: ஒரு சட்ட சபை ...ண்ட கூட்டணி அரசு.

...தந்திரம்: ...ிரான்சிடமிருந்து- ...கஸ்ட் 15, 1960.

...தசிய பெயர்: ...பப்ளிக் டு கொங்கோ ...Republic of the Congo).

...தசிய விடுமுறை தினம்: ...தந்திர தினம், ஓகஸ்ட் 15.

...திபர் (2009): ஜெனரல் டெனிஸ் ஸஸோ கெஸோ.

## புவியியல்

...த்திய மேற்கு ஆபிரிக்காவில் பூமத்திய ...கைக்கு இருமருங்கிலும் கொங்கோ குடியரசு ...மைந்துள்ளது. இதன் எல்லைகளாக கெபொன், ...மரூன், மத்திய ஆபிரிக்க குடியரசு, கொங்கோ ...நாயகக் குடியரசு, அங்கோலா ஆகிய ...கஞம் தென் அட்லாண்டிக் சமுத்திரத்தின் ...டு செல்லும் குறுகிய கரையோரப் பகுதியும் ...ணப்படுகின்றன. நாட்டின் பெரும்பாலான ...திகள் ஈரலிப்பான மழைக்காடுகளைக் ...ண்டவை. இவை கொங்கோ நதியின் கிளை ...களால் போஷிக்கப்படுகின்றன.

...மாத்த நிலப்பரப்பு: 132,047 ச.மைல் (342,000 ச.கி.மீ);

...லப்பரப்பு: 131,853 ச.மைல் (341,499 ச.கி.மீ).

...லைநகரமும் பெரிய நகரமும் (2003): ப்ரெஸாவில்லே.

...னைய பெரிய நகரம்: பொய்ன்ட்- நொயர்.

...யர் சிகரம்: லெகேடி மலை-1040 மீற்றர் (3410 அடி);

...ாழ் மையம்: அட்லாண்டிக் சமுத்திரம்.

...லப்பிரிவுகள்: 9 பிராந்தியங்களும் 1 சமூக மையமும்.

...னத்தொகை (2009): 4,012,809.

...ாணயம்: CFA ஃப்ரேங்க்.

...மாழிகள்: பிரெஞ்ச் (அரச கரும மொழி), ...காலா, மொனொகுட்டுபா, கிகொங்கோ, ...டிகே உட்பட பல உள்நாட்டு மொழிகள்.

இனங்கள்: கொங்கோ 48%, செங்ஹா 20%, எம் போச்சி 12%, டிகோ 17%, ஐரோப்பியரும் ஏனையோரும் 3%.

சமயங்கள்: கிறிஸ்தவம் 50%, உள்ளூர் நம்பிக்கைகள் 48%, இஸ்லாம் 2%.

எழுத்தறிவு (2003): 84%.

இணையத்தளக் குறியீடு: .cg

தொலைபேசி குறியீட்டு இலக்கம்: 242

தேசிய சின்னங்களாக (மரம், மலர், பறவை, மிருகம், விளையாட்டு) எதுவும் பிரகடனப்படுத்தப்படவில்லை.

**தேசிய கீதம்**

En ce jour le soleil se lève
Et notre Congo resplendit.
Une longue nuit s'achève,
Un grand bonheur a
surgi.... என ஆரம்பிக்கின்றது.

## வரலாறு

இன்றளவில் 'கொங்கோ குடியரசு' என அழைக்கப்படும் இந்நாடு, காலனித்துவ ஆட்சிக்கு முற்பட்ட காலத்தில் மூன்று அரசுகளாகப் பிளவுபட்டிருந்தது. அவை கொங்கோ, லோங்கோ மற்றும் டியோ என்பனவாகும். பின்னர் 1482 இல் போர்த்துக்கேயர் ஆபிரிக்க கண்டத்தின் முக்கிய நதிகளில் ஒன்றாகிய 'கொங்கோ' நதியைக் கண்டுபிடித்தனர். இதனை அடுத்து வர்த்தகமும் அடிமை வியாபாரமும் அங்கு பல்கிப் பெருகின.

தென் சஹாரா நாடுகளில் எழுத்தறிவு மிகுந்த நாடாகிய கொங்கோ குடியரசு, 1880 இல் பிரான்சியரின் குடியேற்ற நாடாகியது. அதன்பின்னர் 'பிரெஞ்ச் கொங்கோ' என்றும் 1905 இலிருந்து 'மத்திய கொங்கோ' எனவும் அழைக்கப்பட்டது. கெபோன் மற்றும் உபாங்கி ஷெரி என்பன பிரெஞ்ச் காலனியுடன் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து, 1910 முதல் 'பிரெஞ்ச் மத்திய கோட்டு ஆபிரிக்கா' என அழைக்கப்பட்டது. 1960 இல் பிரான்சிடமிருந்து சுதந்திரம் பெற்றது.




கொங்கோ நதி





அதிபர்




## காலநிலை

பூமத்திய கோட்டில் அமைந்துள்ளதால் கொங்கோ வருடம் முழுவதும் வெப்பத்தைக் கொண்ட நாடாக விளங்குகின்றது. நாள்தோறும் உயர் வெப்பநிலையாக ஏறக்குறைய 90⁰ வெப்பம் வரை நிலவுகிறது. மழைப்பருவம் ஒக்டோபர் முதல் மே வரையுள்ள காலமாகும்.

## தொடர்பாடல்

தொலைபேசிகள்: பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் (2003): 7000; செல்லிடத் தொலைபேசிகள்: 330,000. வானொலி நிலையங்கள் (2001): AM 1, FM 5, SW 3. தொலைக்காட்சி நிலையம் (2002): 1. இணையத்தள வழங்குனர் (2003): 46. இணையத்தளப் பாவனையாளர்கள்: 15,000.

## போக்குவரத்து

புகையிரப்பாதைகளின் மொத்த நீளம்: 894 கி.மீற்றர். பெருந்தெருக்கள்: மொத்தம் 12,800 கி.மீற்றர் (செப்பனிடப்பட்டவை: 1,242 கி.மீற்றர்; செப்பனிடப்படாதவை 11,558 கி.மீ).

நீர்வழிப் போக்குவரத்து: 4385 கி.மீ. (கொங்கோ நதி மற்றும் ஔபான்கியூ நதி). துறையும் துறைமுகமும்: ப்ரெஸாவில்லே, டிஜெனோ, இம்ப்பொஃன்டோ, ஔவெஸ்ஸோ, ஓயோ, பொய்ன்ட் நொயர். விமான நிலையங்கள் (2004): 32.

## பொருளாதாரம்

விவசாயம் (பயிர்ச்செய்கை நிலம் 1%): கஸாவா,சீனி, அரிசி, சோளம், நிலக்கடலை, மரக்கறி வகைகள், கொக்கோ, கோப்பி. கைத்தொழில்கள்: பெற்றோலிய சுத்திகரிப்பு, சீமெந்து, சீனி,பாம் எண்ணெய், சவர்க்காரம், கோதுமை, சிகரெட் வகைகள். இயற்கை வளங்கள்: பெற்றோலியம், பெறுமதிமிக்க மரங்கள், பொட்டாசியம், நிலக்கரி, துத்தநாகம், யுரேனியம், செம்பு, பொஸ்பேட்ஸ், இயற்கை வாயு, நீர்மின் வலு. ஏற்றுமதிகள் (2005): பெற்றோலியம், ஒட்டுப்பலகை, சீனி, கொக்கோ, கோப்பி, இரத்தினக்கற்கள். இறக்குமதிகள் (2005): மூலப்பொருட்கள், கட்டடப்பொருட்கள், உணவுப் பொருட்கள். முக்கிய வர்த்தகப் பங்காளிகள் (2004): சீனா, தாய்வான், வட கொரியா, ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், தென் கொரியா, ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

* கோட் சொவேஜ் (கடற்கரை) * சிம்பௌங்கா சிம்பஞ்சிகள் சரணாலயம் * ஒட்சலா தேசிய வனவிலங்குகள் பூங்கா * மியுஸி நெஷனல் டு கொங்கோ (கொங்கோ தேசிய நூதனசாலை) * Temple Mosque * Basilique St. Anne * Charles de Gaulle House * Gorges of Diosso (கண்கவர் குன்றுப் பகுதி)

...rges of Diosso







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராட்சதமுனை என அழைக்கப்பட்ட ராசமுனகந்த

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை 1658 ஆம் ஆண்டு முதல், 1796 ஆம் ஆண்டு வரை 138 வருடங்களாக 41 ஒல்லாந்த ஆளுனர்கள் நிர்வகித்து வந்தனர். அவர்களில் 1726 ஆம் ஆண்டு முதல், 1729 ஆம் ஆண்டு வரையிலான மூன்று வருட காலப்பகுதிகளை நிர்வகித்த பிரீடஸ் டைஸ்ட் எனும் ஆளுனர் மிகக் கொடூரமானவன்.

ஆஜானுபாகுவான தோற்றமுள்ள அவன் செப்டெம்பர் மாதம் காலித்துறைமுகத்தில் வந்திறங்கினான். காட்டுமிராண்டிகள் போன்ற நாகரிகமற்றோர் வாழும் சின்னஞ்சிறு தீவே இலங்கை எனும் எண்ணம் அவன் உள்ளத்தில் பதிந்திருந்தது. எனவே, இதை நிர்வகிக்க இரண்டு கண்கள் வீண் எனக் கூறி ஒரு கண்ணை அவன் கறுப்புப் பட்டியால் கட்டி மூடியிருந்தான்.

தற்போது கொழும்புக் கோட்டை முதலிகே மாவத்தை 'குளோப் ஹோட்டல்' அமைந்துள்ள இடத்தில் அக்காலத்தில் இருந்த ஒல்லாந்தர் ஒருவரின் வீட்டை பிரீடஸ் டைஸ்ட் கைப்பற்றி தனது வாசஸ்தலமாக்கிக் கொண்டதுடன், அங்கே அவன் இளைஞர் சமூகத்தினரைப் பலாத்காரமாக இழிசெயல்களில் ஈடுபடுத்தினான். இதனால், ஆத்திரமுற்ற வீட்டு உரிமையாளர் தமது வீட்டைத் திருப்பித் தருமாறு கேட்டார்.

இதனால், வெறிபிடித்த ஆளுனர் வீட்டு உரிமையாளரை சித்திரவதை செய்து கொன்று தலையைக் கொய்து தூணொன்றில் தொங்கவிட்டான். ''என்னை விரோதிப்போருக்கு நான் வழங்கும் தண்டனை இது தான்'' எனும் வாசகத்தையும் அருகில் எழுதி வைத்தான். இதனால், ஆளுனருக்கு எதிராக ஒரு வார்த்தையேனும் பேச இலங்கையர் மட்டுமல்ல; ஒல்லாந்தரும்கூட முன்வரவில்லை.



அது 'ராட்சதமுனை' என்றே அழைக்கப்பட்டது. 'பிசாசு பலியாகும் இடம்' என்பதே அதன் அர்த்தமாகும். அக்கா பகுதிகளில் அங்கிருந்த பழைய கிணற்றைத் தோண்டி போது பல சிறுவர்களின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக் பட்டன.

ஆளுனர் பிரீடஸ் டைஸ்டின் இத்தகைய கொடூர மன பான்மைகளைப் பொறுக்கமுடியாத ஒல்லாந்த அதிகாரி

**எதிரிகளை விட்டு வைக்காத அவன் தனது எதிரிலேயே அவர்களை தற்கொலை செய்து கொள்ளத் தூண்டினான் எதிரியுடன் எதிரியை மோதவிட்டு இருவரையும் சாகடிப்பதும் அவனது கொடூர தண்டனை முறைகளாக இருந்தன**

இராணுவ நிர்வாகிகளும் ஒல்லாந்த அரசுக்கு அறிவித்த இதனால், ஆத்திரமடைந்த பிரீடஸ் டைஸ்ட் அதற்கு உ தையாக இருந்த எந்தோனிகஸ்கவ் என்பவரைப் பீரங்கி திணித்து வெடிமருந்தை நிரப்பி அதனை இயக்கினான். அதனால், எந்தோனிஸ்கவ்வின் உடல் சுக்குநூறாகியது.

இதன் பின்னர் பிரீடஸ் டைஸ்ட் காலிமுகத்திடலில் மக்களைக் கூடுமாறு கட்டளையிட்டான். ''அனைவரு தெரிந்துகொள்ளுங்கள். காட்டிக் கொடுப்போருக்கு இத தண்டனை. இதில் தராதரம் பார்க்கமாட்டேன்'' என்று வெறிபிடித்தவன்



பிரீடஸ் டைஸ்ட்டின் காலத்தில் ஒல்லாந்தக் கம்பனியின், ஆயுதக் களஞ்சிய சாலையில் ஓர் ஆயுத உற்பத்தியாளர் இருந்தார். 'கேப்ரியல் சார்க்' எனும் அவர்தான் சிங்கள அச்செழுத்துக்களை உருக்கி வடிவமைத்து பைபிளை சிங்களத்தில் மொழி பெயர்த்தவராவார். அதுவே முதன்முதலில்

**அக்காலப் பகுதிகளில் அங்கிருந்த பழைய கிணற்றைத் தோண்டியபோது பல சிறுவர்களின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன**

பிரசுரமான சிங்கள அச்சுநூல் என வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. கேப்ரியல் சார்கின் முயற்சிக்குத் துணையாக கே.டபிள்யூ.கொனயின் ஜே.பி.டெடய்சப் எனும் பாதிரிமார்கள் இருந்தனர்.

இவரின் இந்த முயற்சியை அறிந்த ஆளுனர் பிரீடஸ் டைஸ்ட், கேப்ரியல் சார்கைக் கைது செய்து கொடூரமாகச் சித்திரவதை செய்தான். இதன் காரணமாக 1737 ஆம் ஆண்டு கேப்ரியல் சார்க் மரணமடைந்தார். அதன்பின் சில காலங்கள் கழித்து சிங்கள மொழி அச்சுப்பதிப்பில் பைபிள் வெளியாகியது. இதை வெளியிடுவதற்கு பிரீடஸ் டைஸ்ட்டுக்குப் பின்னர் ஆளுனராகப் பொறுப்பேற்றவரே உதவி புரிந்தார்.

அக்காலப் பகுதிகளில் மட்டக்குளி ராசமுனகந்த குன்றாகவே இருந்தது. அதன் அடிவாரத்தில் பிரீடஸ் டைஸ்டின் அமைவிடம் ஒன்று இருந்தது. அங்கு எப்போதும் போதையுடன் இருக்கும் அவனுக்கு மாமிசம் வழங்குவது சமையற்காரரின் கடமையாக்கப்பட்டிருந்தது. ஒருநாள் மாமிசம் கிடைக்காதபோது தண்டனைக்குப் பயந்த சமையற்காரர் அவ்வீட்டிலிருந்த ஒரு சிறுவனைக் கொன்று சமைத்தான். அதன் ருசியால் கவரப்பட்ட பிரீடஸ் டைஸ்ட் அதே மாமிசம் தொடர்ந்தும் தனக்கு வேண்டும் எனக் கட்டளையிட்டான். இதனால், பல சிறுவர்கள் அப்பகுதிகளில் பிடிக்கப்பட்டனர். தற்போது அவ்விடம் 'ராசமுன' என்று அழைக்கப்பட்டாலும் அக்காலத்தில்



போல் அங்கு உரையாற்றினான். இதைக் கண்டு அனைவரும் நடுநடுங்கினர்.

மேலும், தனது எதிரிகளை விட்டு வைக்காத அவன் த எதிரிலேயே அவர்களை தற்கொலை செய்து கொள்ளத் தூண்டினான் எதிரியுடன் எதிரியை மோதவிட்டு இருவரையும் சாகடிப்பதும் அவனது கொடூர தண்டனை முறைகளாக இருந்தன. மேலும் கொடூரமாகச் செயற்பட் அவன் தனது எதிரிகளை விலங்குகளுக்கு உணவாக க வைத்தும் பயங்கர மிருகக்கூண்டுக்குள் தள்ளிவிட்டும் தனது தண்டனைகளை ஈவிரக்கமின்றி நிறைவேற்றின

எனினும், அவனுக்கெதிரான குற்றச்சாட்டுக் கடிதம் ஒல்லாந்த அரசனின் கைவசம் கிடைத்ததால் புதிய ஆளுனராக 1729 ஆம் ஆண்டு ஸ்டிபன்ஸ்வர்ஸ் லுயிஎ என்பவர் அனுப்பப்பட்டார். பதாவியிலிருந்து கிடைத்த உத்தரவுப்படி கை,கால்களில் விலங்கிடப்பட்டு பிரீடஸ் டைஸ்ட் இழுத்துச் செல்லப்பட்டான். பதாவியில் வழக் விசாரிக்கப்பட்டு குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கப்பட் அவனின் உடல் துண்டு துண்டாக வெட்டப்பட்டு எரிக்கப்பட்டது. பின்னர் கருங்கடலில் அவனின் சாம் வீசப்பட்டது.

ஏ.ஜே.எம்.நிழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் II

சுட்டெண்: ................................ நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

பின்வரும் விவரணத்தை வாசித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

**'எப்போது விடியும்' எனக் கண்விழித்துக் காத்திருந்தபோது கொண்டைச்சேவல், கரிய குயில், காகம் போன்ற பறவைகளின் ஒலியைக் கேட்ட குமார் சில நிமிடங்கள் கழிந்த பின்னர் வெளியில் வந்து வில்லுக்குளத்தைப் பார்க்கிறான். ஆதவனும் கீழ்த்திசையில் தோன்றிவிட்டான். கதிரவனின் வரவைக் கண்டு குளத்திலுள்ள செந்தாமரை மலர்கள் முகந்திறந்து தேனைச் சிந்துகின்றன. வயல் அருகிலுள்ள ஓடைகளிலிருந்து நீர் சலசல என பாய்கின்றது. ஆட்டு மந்தைகள் அங்குமிங்கும் அலைந்து இலைகுழைகளை உண்கின்றன. நெற்பயிர்களிடையே காணப்படுகின்ற நெற்சப்பி, கோரை, முள்ளி போன்றவற்றை பெண்கள் பிடுங்குகிறார்கள்.**

(01) இவ்விவரணத்தில் எக்காட்சி வர்ணிக்கப்படுகின்றது? ..............................

(02) சூரியனைக் குறிக்கும் இரண்டு சொற்கள் எழுதுக. ..............................

(03) எழுவாய் அடைமொழிச் சொற்கள் இரண்டு எழுதுக. ..............................

(04) 'செந்தாமரை' என்ற சொல்லைப் பிரித்து எழுதுக. ..............................

(05) இப்பகுதியில் காணப்படும் காலப்பெயர் ஒன்று தருக. ..............................

(06) இங்கு காணப்படும் இணைமொழி ஒன்றினை எழுதுக. ..............................

(07) இங்கு காணப்படும் இரட்டைக்கிளவி ஒன்றை எழுதுக. ..............................

(08) பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொற்களை எழுதுக.

(அ) வயல் .............................. (ஆ) குளம் ..............................

(09) இங்கு வாழும் மக்கள் மேற்கொள்ளும் தொழில் யாது? ..............................

(10) இங்கு காணப்படும் களைகள் மூன்று எழுதுக. ..............................

**பொருத்தமான மரபுச் சொற்களை வெற்றிடங்களில் எழுதுக.**

(1) கடுவன் குரங்கும் .............................. குரங்கும் தம் குட்டியுடன், கிளைகளில் தாவிச் சென்றன.

(2) வண்டு இரையும் என்பதுபோல் புறா: ..............................

**இலக்கண வழுக்களுடைய வாக்கியங்களைத் திருத்தி எழுதுக.**

(1) பிரதீபனும் குமாரும் ஓடி வந்தன. ..............................

(2) புலவர் பாரியைப் புகழ்ந்து பாடின. ..............................

**பின்வரும் மரபுத் தொடர்களின் உட்கருத்தை எழுதுக.**

(1) கை கொடுத்தல்: ..............................

(2) புண்படுத்துதல்: ..............................

**வெற்றிடத்துக்குப் பொருத்தமான மிகச்சரியான சொல்லின்கீழ்க் கோடிடுக.**

(1). அடிக்கடி .............................. ஏற்படுவது உடல் நலக்குறைவினால் எனலாம். (காச்சல், காய்ச்சன், காய்ச்சல்)


(2) உணவு உண்ணுமுன் .............................. இட்டுக் கை கழுவுவது நல்லது. (சவுக்காரம், சவக்காரம், சவர்க்காரம்)

**பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.**

(1) பேராசை பெருந் தரித்திரம் : ..............................

(2) கோபம் பாவத்தைத் தேடும் : ..............................


**உருக்களை நன்கு அவதானித்து, ஒவ்வொன்றுக்கும் உரிய ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துகளில்) எழுதுக.**



(1) ....................



(2) ....................



(3) ....................

**கருத்தினை தமிழில் எழுதுக.**

(1) Throw the ball - ..............................

(2) Happy Birthday - ..............................

(3) Thank you - ..............................

**இதன் கருத்தைத் தமிழில் எழுதுக.**

(Dh)தும்ரிய ஸ்தான ..............................

**'கதை எழுதுங்கள்' என்பது சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக?**

..............................

★ ***11 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களின் மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.***

**பூவரசு இலையின் வடிவத்தை ஒத்த வடிவமுள்ள இலைகள் இருக்கும் தாவரம் எது?**

(1) அகத்தி (2) வேலிப்பருத்தி (3) சித்தாமணக்கு (4) மரவள்ளி

**மாலைவேளையில் இலைகளைச் சுருக்கிக்கொள்ளும் தாவரம் எது?**

(1) வாகை (2) ஈரப்பலா (3) வெண்டி (4) எலுமிச்சை




**13. தொட்டாற்சுருங்கிப் பூவை ஒத்த வடிவமுடைய பூக்களைக்கொண்ட தாவரம் எது?**

(1) எழுத்தாணிக்கீரை (2) கொவ்வை (3) இப்பிலிப்பில் (4) வெடிப்பலவன்

**14. சுற்றாடலில் சேரும் அழுக்குகளை உட்கொண்டு சுற்றாடலைச் சுத்தப்படுத்தும் பிராணி எது?**

(1) நாய் (2) கோழி (3) காகம் (4) பன்றி

**15. தான் செல்லுமிடமெல்லாம் தன்னோடு வாழ்விடத்தையும் கொண்டு செல்லும் பிராணி எது?**

(1) எறும்பு (2) யானை (3) மண்புழு (4) நத்தை

**16. விவசாயிகள் வேளாண்மையின் அறுவடைக் காலத்தை அறிந்துகொள்வதற்கு உதவுவது எது?**

(1) நெற்கதிருக்கு அடுத்து இருக்கும் இலை சிவப்பு நிறமாகிய பின்

(2) நெல்மணிகளை உடைத்துப் பார்த்து


(3) நெற்கதிருக்கு அடுத்து இருக்கும் இலை மஞ்சள் நிறமாகிய பின்

(4) நெற்கதிர் மஞ்சள் நிறமாகிய பின்

**17. துவிச்சக்கர வண்டியின் பொருத்தமற்ற பயன்பாடு;**

(1) உடற்பயிற்சியாக அமைதல் (2) எளிய பராமரிப்பு (3) எரிபொருள் தேவையின்மை (4) சூழலை மாசடையச் செய்யும்

**18. கஞ்சக் கருவி எது?**



(1) (2) (3) (4)

**19. தோசம் நீக்கிக்கொள்வதற்காக 'பிரித் ஓதிய நீர்' தெளித்தல்;**

(1) தமிழர்களின் சம்பிரதாயம் (2) பௌத்தர்களின் சம்பிரதாயம் (3) முஸ்லிம்களின் சம்பிரதாயம் (4) கிறிஸ்தவர்களின் சம்பிரதாயம்

**20. தர்மச் சக்கரம், நிறைகலசம், வாளேந்திய சிங்கம், நெற்கதிர், மலரிதழ், சூரிய சந்திரர் என்பன காணப்படுவது;**

(1) தேசிய கொடியில் (2) தேசிய இலச்சினையில் (3) பௌத்த கொடியில் (4) தாள் காசில்

**21. மஞ்சள் நிறப் பின்னணியில் காணப்படும் இவ்வீதிச் சமிக்ஞை எதைக் குறிக்கின்றது?**



(1) முன்னால் சிறுவர் கடவை

(2) முன்னால் பாடசாலை

(3) பாதசாரிகள் கடவை (4) முன்னால் பாதசாரிகள் கடவை

**22. இடி-மின்னலுடன் மழை பெய்யும்போது பாதுகாப்புக்காக பின்பற்றவேண்டிய நடவடிக்கைகள் எது?**


(1) வீட்டினுள்ளே இருத்தல்

(2) விளையாட்டு மைதானத்தில் விளையாடுதல்

(3) மின் சாதனங்களின் பாவனையைத் தவிர்த்தல்


(4) ஆறு, குளம், நீச்சல் தடாகம் போன்றவற்றில் நீந்துதல்

**23. இங்கு காட்டப்படும் உடுக்கோலத்திற்கு வழங்கப்படும் பெயர் யாது?**



(1) கலப்பை (2) ரிஷபம் (3) தென்சிலுவை (4) கும்பம்

**24. தையல் முறைகளிடையே 'கம்பளித் தையலை'க் காட்டும் உரு யாது?**



(1) (2) (3) (4)

**25.**  **எதிரேயுள்ள இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கும் பொதி எது?**

(1) பால் மா (2) சீமெந்து (3) கண்ணாடி (4) தீப்பெட்டி

**மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறியவர்கள்-பெரியவர்கள் என்ற வேறுபாடு இன்றி, அனைவரையும் உடலளவில் வாட்டி வதைக்கும் திறன் காய்ச்சலுக்கு இருக்கின்றது. தம்மை வாட்டுவது எவ்வகையான காய்ச்சல் என்று தெரியாத அளவுக்குத் திடீர் திடீரெனக் காய்ச்சல்கள் ஏற்பட்டு மக்களை மிரட்டி வருகின்றன.**



# மிரட்டும் காய்ச்சல்



## காய்ச்சல் என்பது...

காய்ச்சல் என்பது ஒரு நோயல்ல; அது நோயின் அடையாளமே. உடனடியாக நிர்ணயிக்க முடியாத பல்வேறு காரணங்களினால் இது ஏற்படலாம். சீதோஷ்ணம் மாறும்போது, மூக்கில் உள்ள மெல்லிய ஜவ்வுகளில் நீர் கோர்த்து அதன் மூலமும் காய்ச்சல் வர வாய்ப்புண்டு. மருத்துவர் ஒருவரால்கூட ஒரு நோயாளியை சந்திப்பதனூடாக மட்டும் அது எவ்வகையான காய்ச்சல் என்பதை இனம் பிரித்தறிந்து சிகிச்சையளிக்க முடியாது. மாறாக, முழுமையான பரிசோதனைகளுக்குப் பின்னரே காய்ச்சலின் தன்மையைக் கண்டறிய முடியும். காய்ச்சலில் பல்வேறு வகைகள் உள்ளன. அவற்றில் சிலவற்றை நோக்குவோம்.

## வைரஸ் காய்ச்சல்

பொதுவாக வைரஸ் காய்ச்சலின்போது ஜவ்வுகள் ரணமாகி, கால்





மூட்டில் மிகுந்த வலியெடுக்கும். உடல் சோர்வடையும். எலும்புகளைத் தொட்டால் அல்லது கண்களை அசைத்தால் வலிக்கும். மூளையைச் சுற்றியுள்ள உறைகள் பாதிப்படைந்து தலை வலிக்கும். வயிற்றுக்கோளாறுகள் ஏற்படும். 102° வரை காய்ச்சல் இருக்கும். அதனுடன், இருமலும் காணப்படும்.

இந்தக் காய்ச்சலுக்கு நேரடியான மாத்திரைகள் இல்லை. எனினும், வலி நிவாரணி, விற்றமின், ஒவ்வாமை மாத்திரைகளுடன் தேவைப்பட்டால் என்டிபயோடிக்கும் கொடுப்பார்கள். இக்காய்ச்சலுக்கு 5 முதல் 7 நாட்களுக்கு முழு ஓய்வு தேவை. எளிதில் ஜீரணமாகின்ற, எண்ணெய் இல்லாத உணவுகள், பழச்சாறுகளைச் சாப்பிடலாம்.

## சிக்குன்குன்யா


மேற்கூறிய வைரஸ் காய்ச்சலுக்குரிய அறிகுறிகள்தான் இக்காய்ச்சலின்போதும் ஏற்படும். 7 நாட்கள் தொடக்கம் 3 மாதங்கள் வரை இதன் பாதிப்பு இருக்கும். வைரஸ் காய்ச்சலையும் சிக்குன்குன்யாவையும் இனம்பிரித்தறிவதில் சற்றுக் குழப்பம் இருப்பினும், வைரஸ் காய்ச்சலுக்குரிய சிகிச்சை முறைகளே இதற்கும் பின்பற்றப்படுகின்றன.

## மலேரியா

குளிருடன்கூடிய கடும் காய்ச்சல் ஏற்படும். பின்னர் உடல் வியர்த்துக் கொட்டும். திடீரென காய்ச்சல் குறைந்து சாதாரண நிலைக்கு வருவதுடன், சீரான இடைவெளியில் மீண்டும் காய்ச்சல், உதறல் ஏற்படும். தாமதிக்காமல் மருத்துவரை அணுக வேண்டும். அரச மருத்துவமனைகளில் இக்காய்ச்சலுக்கு தரமான மருந்துகள் உள்ளன.

## எலிக்காய்ச்சல்

'Leptospirosis' என்பது இக்காய்ச்சலின் பெயர். அண்மைக்காலமாக இதன் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது. இது எலியின் சிறுநீர் மூலம் பரவுவதுடன்; தேங்கிக்கிடக்கும் நீர், முறையாகக் கழுவாத பாத்திரங்கள் வழியாகவும் இக்கிருமி உடலில் புகுந்து குருதியில் கலந்துவிடுகின்றது. இதற்குரிய அறிகுறிகளாக காய்ச்சல், தசை வலி, கை-கால் மூட்டு வலி, கண் சிவத்தல், ஈறுகளில் ரத்தக் கசிவு, தொடர் வாந்திபேதி போன்றவை ஏற்படும். உடனடியாக இனம் கண்டு சிகிச்சை அளிக்காவிட்டால் சிறுநீரகப் பாதிப்பு, மஞ்சள் காமாலை என்பன ஏற்பட்டு உயிருக்கே ஆபத்து நேரலாம்.





## AH1N1 வைரஸ் காய்ச்சல்

தீவிரமான காய்ச்சலுடன் மூக்கு ஒழுகுதல், சளி, தலைவலி, தொடர் தும்மல், இருமல், உடல் சோர்வு, வாந்திபேதி ஆகியன இருந்தால் அது AH1N1 காய்ச்சலுக்கான அறிகுறியாக இருக்கலாம். 7 நாட்களுக்குள் சிகிச்சை அளிக்காவிட்டால் நுரையீரல், மூளை என்பனவவற்றைப் பாதிக்கும். முறையான சிகிச்சை எடுத்துக்கொண்டால் ஒரு வாரத்தில் குணமடையலாம்.

## டெங்கு

நிலவும் பருவநிலையிலும் மனிதனின் கவனயீனத்தால் நிகழும் சுற்றுச்சூழல் சீர்கேட்டினாலும் இலங்கையில் டெங்குக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வரும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளைவிட இந்த ஆண்டில் டெங்கு நோய்த்தாக்கம் அதிகம் இருப்பதாக ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன.

டெங்கு நோய்க்கான வைரஸ் உடலுக்குள் சென்று 5-6 நாட்களில் நோய் அறிகுறிகள் தென்படும். சாதாரண வைரஸ் காய்ச்சல் போன்று இருந்தாலும், நோய் தீவிரம் அடைந்தால் நோயாளி இறக்கவும் நேரிடும். நோய் அறிகுறிகளாக காய்ச்சல் விட்டுவிட்டு ஏற்படுவதோடு, மூட்டு - தசைகளில் வலி, தொண்டை அடைப்பு, கண்களின் கீழ்ப்பாகம் வீங்கி வலி ஏற்படல், கடும் தலைவலி, வயிற்றுவலி, உடலில் சிவப்புக் கொப்புளங்கள் என்பன ஏற்படலாம். அதுவே, டெங்கு தீவிரமடைந்தால் மூக்கு, காது, முரசுகளில் இருந்து ரத்தக் கசிவு, ரத்தவாந்தி, சிறுநீர் கழிக்கும்போதும் மலத்துடனும் ரத்தம் வெளியேறல் என்பனவும் ஏற்படலாம்.

## காய்ச்சல் வந்தால்....?

- ★ **நீங்களாகவே மருந்து வாங்கி உட்கொள்ளக்கூடாது. மருத்துவர் மூலமே சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.**
- ★ **பிறரிடமிருந்து ஒதுங்கியிருங்கள். தும்மல், இருமல் வரும்போது கைக்குட்டையைப் பயன்படுத்துங்கள்.**
- ★ **பயமோ, பதற்றமோ தேவையில்லை.**

## தடுக்க முடியும்

- ★ **பெரும்பாலான காய்ச்சல்கள் நுளம்புகளால்தான் பரவுகின்றன. சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்பதுடன், வீட்டருகே மழைநீர், சாக்கடை என்பன தேங் நிற்க விடக்கூடாது.**
- ★ **கை, கால்களைஅடிக்கடி சவர்க்காரம் இட்டுக் கழுவ வேண்டும்.**
- ★ **பாதிக்கப்பட்டவரிடம் நேரடியா தொடர்பைத் தவிர்க்க வேண்டும்.**
- ★ **தேங்கிய அசுத்தமான நீரில் நடக்கக்கூடாது.**
- ★ **எலிகளை அண்டவிடக்கூடாது.**
- ★ **பாத்திரங்களை நன்கு கழுவிப் பயன்படுத்த வேண்டும்.**
- ★ **நீரைக் கொதிக்க வைத்து வடிகட்டியபின் குடிப்பது சிறந்த**
- ★ **நீண்டநேரம் வெட்டி வைத்த பழங்கள், காய்கறிகளை உண்ணக்கூடாது. சூடான உணவுகளையே உண்ண வேண்டும்.**
- ★ **நல்ல ஓய்வு, நல்ல தூக்கம் தேவை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த மாதம் (ஜூன் மாதம்) இலங்கையில் போஷாக்கு மாதமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, நாட்டின் எதிர்கால சந்ததியினரான பிள்ளைகள் போஷாக்கின்மையினால் பாதிக்கப்படுவார்களாயின், எதிர்கால சந்ததிகள் முற்றுமுழுதாக நோய்வாய்ப்பட்டவர்களாகவே இருப்பர்.

# பிள்ளைகளுக்கா

## இது போஷாக்கு மாதமாகும்

நாட்டின் எதிர்காலம் பிள்ளைகளின் கைகளிலேயே தங்கியுள்ளது. திர்காலத்தில் ஆரோக்கியமான சந்ததியினரை உருவாக்க அவர்களின் பாஷாக்கு மட்டம் குறித்துக் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். தன்படி, இந்த மாதத்தினை 'தேசிய போஷாக்கு மாதம்' என சுகாதார மைச்சு பிரகடனப்படுத்தியுள்ளது. நாட்டில் வாழும் அனைத்து பிள்ளை ளும் சிறந்த போஷாக்குடைய பிள்ளைகளாக இருக்க வேண்டும் என்பதே தன் முக்கிய நோக்கமாகும்.

## தரவுகளின் அடிப்படையிலான போஷாக்குப் பிரச்சினைகள்

2009, ஜூன் மாதம் முழுவதும் அமுலில் இருந்த தேசிய போஷாக்கு மாதக் லப்பகுதியில் பாடசாலை மாணவ, மாணவிகளின் போஷாக்குப் ரச்சினைகள் குறித்து தரவுகள் சேகரிக்கப்பட்டன. இதன் ஊடாக டசாலை மாணவ, மாணவிகளின் போஷாக்கு மட்டம் தொடர்பான பிரச்சினைகள் சில இனங்காணப்பட்டன. இதேவேளை, சில காலமாக உணரப் பட்டு வந்த 'அயடின் குறைபாட்டுப் பிரச்சினை' சற்று வீழ்ச்சி கண்டுள்ள மையை இந்த ஆய்வின்போது அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

## உயரத்திற்கு ஏற்ற நிறை இன்மை

கடந்த ஆண்டின் போஷாக்கு மாதக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, 10 வயது முதல் 19 வயது வரையான பாடசாலை மாணவர் களில் பெரும்பாலானவர்கள் உயரத்திற்கு ஏற்ற நிறையைக் கொண்டிருக்க வில்லை. இது ஓர் ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினையாகும். பெறப்பட்ட தரவு களின்படி, இளம் பருவ ஆண் மாணவர்களில் 32 சதவீதமானவர்களும் பெண் பிள்ளைகளில் 25 சதவீதமானவர்களும் இந்த பிரச்சினைக்கு இலக்காகியுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

## ஏனைய குறைபாடுகள்

* இரும்புச்சத்துக் குறைபாடு

2001 ஆம் ஆண்டின் மருத்துவ ஆய்வறிக்கைகளின்படி, 10 வயது தொடக்கம் 19 வயது வரையான பிள்ளைகளில் 22.3 ச குறைபாடுக்கு இலக்காகி உள்ளனர். இவர்க வகிப்பதுடன், அத்தொகை 25.7 சதவீதமாக சதவீதமாகவும் இருக்கின்றது.

* விற்றமின் A குறைபாடு

இதுவரை கிடைத்துள்ள தரவுகளின்படி, பிள்ளைகளில் (முன்பள்ளி செல்லும் பருவ A குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளன


* உயரத்திற்கு ஏற்ற நிறையிலும் அ

பாடசாலை செல்லும் பருவத்திற்குட்பட் எதிர்கொள்ளும் பிரச்சினைகளிடையே பிர ஒரு பிரச்சினையாக இது இருக்கின்றது. அ தொடக்கம் 19 வயது வரையிலான பிள்ளை பிரச்சினைக்கு முகம்கொடுக்கின்றனர்.

## ஏன் இவ்வாறு ந

தற்காலத்தில் பாடசாலை செல்லும் பிள்


## பிள்ளைகளுக்கு உயரத்திற்கு ஏற்ற நிறையில்லை







- பிரதான உணவு வேளைகளைத் தவிர்த்தல்
- வீட்டில் தயாரிக்கப்படும் உணவுகளை நிராகரித்து, வெளியில் கொள்வனவு செய்தல்




- ஒரே மாதிரியான வாழ்க்கை மு
- போட்டித்தன்மைகொண்ட கல்வி மு
- மன அழுத்தத்துக்கு உட்படல்
- பிற செயற்பாடுகள் இன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ன போஷாக்கு எங்கே?



2.3 சதவீதமானவர்கள் இரும்புச்சத்துக் ...இவர்களில் பெண் பிள்ளைகள் முன்னணி ...தமாகவும் ஆண் பிள்ளைகள் 18.1

...படி, ஐந்து வயதுக்குக் குறைவான ...பருவம்) 29 சதவீதமானவர்கள் விற்றமின் ...ளனர்.

...அதிக நிறையினைக்கொண்டிருத்தல்

...ட்பட்ட பிள்ளைகள் சாதாரணமாக ... பிரதானமாக கவனத்தில்கொள்ளத்தக்க ...து. அதாவது, நகரப்பகுதிகளில் 10 வயது ...ள்ளைகளில் 10 சதவீதமானவர்கள் இந்தப் ...

## ...நிகழ்கின்றது?

... பிள்ளைகளின் ஒழுங்கற்ற உணவுப் பழக்கமே இதற்குரிய காரணமாக அமைகின்றது.

* காலை - பாண், தேநீர், ஒரு குவளை நீர், பனிஸ், கட்லட், பெட்டிஸ், ரோல்ஸ், பேஸ்ட்றி போன்றவற்றில் இவற்றில் ஏதாவது ஒன்றை உட்கொள்ளல் அல்லது எதுவுமே சாப்பிடாதிருத்தல்.
* பகல் - சோறு, கறியொன்று, நூட்ல்ஸ், ரொட்டி, துரித உணவு, குளிர்பான வகை.
* இரவு - சோறு, பாண், ரோட்டி அல்லது இடியப்பத்துடன் கிழங்கு, பருப்பு அல்லது ஏதாவதொரு கறி (கடையில் வாங்கியது).

### ஏற்படும் பிரச்சினைகள்

* பிரதான உணவு வேளைகளைத் தவிர்த்தல் (முக்கியமாக காலை உணவு).
* வீட்டில் இருந்து தயாரித்து எடுத்துச் செல்லும் உணவுகளை நிராகரித்து வெளியில் வாங்கிச் சாப்பிடுதல்.
* சீனி, எண்ணெய், உப்பு அதிகம்கொண்ட ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கும் துரித உணவுகள், கொறிக்கும் உணவுகள், பிஸ்கட், இனிப்புப் பண்டங்கள் மற்றும் குளிர்பானங்களுக்கு பழக்கப்படுதல்.
* பலதரப்பட்ட உணவுகள் குறித்து அதிக நம்பிக்கைகொள்ளல் மற்றும் பொய்யான பிரசாரங்களை நம்பி ஏமாற்றத்திற்குள்ளாகி நோய்வாய்ப்படுதல்.
* பழங்கள், கீரை வகைகள், காய்கறிகள் என்பனவற்றை உட்கொள்ளத் தயக்கம் காட்டுதல்.

* கல்சியம் அடங்கிய உணவுகளை குறைவாக உட்கொள்ளல் (சிறிய ரக மீன்கள், பால், முட்டை, நெத்தலி போன்றவை).

## தற்போதைய பாடசாலைப் பிள்ளைகளின் அன்றாட நடவடிக்கைகள்

* காலையில் எழும்புதல், துரித உணவினை உட்கொள்ளல் அல்லது உணவின்றி இருத்தல்.
* பாடசாலைக்குச் செல்லல் (பஸ் அல்லது தனியார் வாகனம்), கற்றல் நடவடிக்கையில் ஈடுபடல், பகலுணவு.
* மேலதிக வகுப்புகள், துரித உணவு உட்கொள்ளல் (ஷோர்ட் ஈட்ஸ், குளிர்பானம்).
* வீட்டுக்குத் திரும்புதல், பாடங்கள் தொடர்பான வீட்டு வேலைகளை முடித்தல், துரித உணவுடன் தேநீர் அருந்துதல்.
* இரவு உணவு, நித்திரை செய்தல்.

### ஏற்படும் பிரச்சினைகள்

* பிள்ளைகள் ஒரே மாதிரியான வாழ்க்கை முறைக்குப் பழகுதல்.
* போட்டித்தன்மைகொண்ட கல்வி முறைக்கு அடிபணிதல்.
* பிற செயற்பாடுகளுக்கு வாய்ப்புக் கிட்டாமை.
* பொழுதுபோக்கு, சுதந்திரமான செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படல்.
* தொலைக்காட்சி பார்த்தல், வீடியோ கேம்ஸ், கணினி விளையாட்டுக்கள் போன்ற உடற்பயிற்சியற்ற செயற்பாடுகளில் ஆர்வம் காட்டல்.
* ஓடி-ஆடி விளையாட வாய்ப்பின்மை.
* கல்விச் செயற்பாடுகள் குறித்து ஆர்வம் குறைதல்.
* உடல் வளர்ச்சியின் வேகம் குறைதல்.
* உடலுக்குப் போதுமான அளவு நித்திரை (ஓய்வு) கிடைக்காமை.
* வீட்டு வேலைகளில் உடலை வருத்தி வேலை செய்யத் தயக்கம் காட்டல்.
* மன அழுத்தத்திற்கு உட்படுதல்.


## காலப்போக்கில் ஏற்படக்கூடிய போஷாக்குக் குறைபாடுகள்

* உயரத்திற்கு ஏற்ற நிறை இன்மை.
* உயரத்திற்கு ஏற்ற நிறையிலும் அதிக நிறை (உடற் பருமன்).
* இரும்புச்சத்துக் குறைபாடு.
* விற்றமின் A குறைபாடு.
* வயதுக்கு ஏற்ற உயரமின்மை.
* உயரத்திற்கு ஏற்ற நிறை இல்லாமை.

### ஏற்படும் பிரச்சினைகள்

* உதாசீனம்.
* நினைவாற்றல் குன்றுதல்.
* பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை அடைய முடியாமை.
* தர்க்க ஆற்றல் குறைதல்.
* சிந்திக்கும் திறன் குறைதல்.
* அடிக்கடி சோர்வு ஏற்படல்.

(இ)










## பருவ வயதை அடையும்போது...

பாடசாலைப் பருவத்தில் ஏற்படும் மேற்படி பிரச்சினைகள் பருவ வயதிலிருந்து வயதான பருவம் வரையும் தொடரும். நாட்டில் வயதுக்கு வந்தோர் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினூடாக இந்த விடயம் நிரூபணமாகியுள்ளது.

2006, 2007 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சுகாதார ஆய்வுகளின்படி, 15 வயது தொடக்கம் 49 வயதுக்கிடையிலான பெண்களில் 6:1 என்ற விகிதத்திலானோர் வயதுக்கு ஏற்ற நிறையைக் கொண்டிருக்கவில்லை. இது மோசமான ஒரு நிலையாகும். 2001 ஆம் ஆண்டின் மருத்துவத் தரவுகளின்படி, பெண்களில் 31.6 சதவீதமானவர்கள் இரும்புச்சத்துக் குறைபாடு உடையவர்களாக உள்ளனர். 2006, 2007 ஆண்டுத் தரவுகளின்படி ஆறு குழந்தைகளில் புதிதாகப் பிறக்கும் ஒரு குழந்தை குறைந்த நிறையுடன் (2.5 கிலோ கிராமிலும் குறைவு) பிறக்கின்றது.

இவ்வாறான குழந்தைகள் நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் இருதய நோய்கள் மற்றும் சில வகைப் புற்றுநோய்களுக்கும் ஆளாகும் வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## எதிர்காலத்தில் பாரிய இழப்புகள்

**கல்வி:** பிள்ளைகளின் போஷாக்கு மட்டம் குறையும்போது கல்வி மீதான நாட்டம் குறையும். அடிக்கடி நோய் வாய்ப்பட நேரிடுவதால், ஆரோக்கியம் சீர்கெடும். நினைவாற்றல், சிந்தனையாற்றல் குறைவடைந்து பரீட்சை பெறுபேறுகள் பாதிப்படையும். இதற்கு சிறந்த உதாரணமாக, கடந்த சாதாரண தரப் பரீட்சையில் ஒரு பாடத்திலேனும் சித்தி அடையாத மாணவர்களின் சதவீதம் அதிகரித்துள்ளமையைக் குறிப்பிடலாம். இதற்கு ஏதுவான ஒரு காரணமாக போஷாக்குக் குறைபாடு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**சமூகம்:** பரீட்சையில் சித்தியடையத் தவறிய பிள்ளைகள் தோல்வி மனப்பான்மையினால் பாதிக்கப்படுகின்றன. சமூக அழுத்தங்களும் அவர்களைப் பாதிக்கத் தவறுவதில்லை. இவர்களின் இந்நிலை பெரும்பாலும் சமூக சீர்கேடுகளில் ஈடுபடக் காரணமாக அமைகின்றது. பின்னர் இது சமூகச் சீரழிவு நிலைக்கு வழிகோலுகின்றது.

**பொருளாதாரம்:** பிள்ளைகள் போஷாக்கு பிரச்சினைகளை எதிர்கொள்வதால் கல்விக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி விரயமாகின்றது. இது இலவசக் கல்வி முறையில் ஏற்பட்டுள்ள பெரும் பிரச்சினையாகும். போஷாக்குப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கத்தினால் மேலதிக நிதியினை செலவிட வேண்டியுள்ளது. கல்வி ஒழுங்காகப் பெறப்படாததனால் புதிய கண்டுபிடிப்புகள், உள்நாட்டு-வெளிநாட்டு உற்பத்திகள் குறைவடைகின்றன. இது பொருளாதார ரீதியில் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுகதைகள்

1. காலில்லாத பந்தலைக் காணக் காண விநோதம். அது என்ன?
2. கரையும் உப்பு அல்ல; நீரில் குளிப்பான் மனிதனும் அல்ல. அது என்ன?
3. இரைச்சலோடு செல்லும் விமானம் அல்ல; இடியோசை தரும் வானமும் அல்ல. அது என்ன?
4. இதயம் போல் துடிப்பிருக்கும்; இரவு பகல் விழித்திருக்கும். அது என்ன?
5. அறைகள் அறுநூறு; அத்தனையும் ஓர் அளவு. அது என்ன?
6. அடித்தால் விலகாது; அணைத்தால் நிற்காது. அது என்ன?

### விடைகள்

1. வானம்
2. சோப்பு
3. வானவெடி
4. கடிகாரம்
5. தேன்கூடு
6. நீர்

## அப்பாவின் அன்புள்ளம்



'எங்கே ரமேஸ், அவன் அடுத்த வீட்டுச் சிறுவனை அடிச்சுப் போட்டானாம்'' என்று மனைவியிடம் கூறியவாறு வீட்டினுள் நுழைந்தார் அப்பா தர்மராசா.

அப்பா வந்து விட்டதை அறிந்த ரமேஸ் மெதுவாக நழுவி, பின்பக்கம் சென்றான். ரமேஸ் ஐந்தாம் ஆண்டு படிக்கும் மாணவன். ஒரே பிள்ளை என்பதால் அவனை செல்லமாக வளர்த்து விட்டனர்.

ரமேஸின் அடாவடித்தனத்தால் அப்பா பல ஊர் வம்புகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியிருந்தார்.

முன்பக்கமாக ரமேஸைக் காணாமல், சமையலறைப் பக்கம் சென்ற அப்பா அங்கே கண்களை மூடி அமர்ந்திருந்த ரமேஸைக் கண்டு கொண்டார்.

''ஏண்டா அடுத்த வீட்டுப் பையனை அடித்தாய்?'' என பலமாக சத்தமிட்டார்.

''என்னடா, நான் கேட்கிறது உன் காதில் விழல்லையா?'

''இல்லப்பா... அவன்தான் என்னை முதலில் அடித்தான்'' என்று விம்மினான்.

''அவன் அடிச்சா அவன் மூக்கை உடைக்கிறதோ? இப்ப அவன் அப்பா என்னைக் கண்டிபடி திட்டி என் மானத்தை வாங்கிவிட்டார். உனக்கு எத்தனை தடவை சொன்னேன்.. கண்ட கண்ட பையன்களோட சேர்ந்து ஊர் சுற்ற வேண்டாமென்று'' ஆத்திரமடைந்த அப்பா அவனை நன்றாக அடித்தார். ரமேஸ் குடிமுழுகிவிட்டாற் போல 'ஓ' வென அழுதான்.



''சரி..சரி அவன் பாவம் தெரியாமல் செய்து விட்டான். அவனை அடிக்காதீங்கோ'' என ரமேஸின் அம்மா அப்பாவிடம் கெஞ்சினார்.

''சரி சரி நான் அடிக்கல. ஆனால், நீதான் இவனைக் கெடுக்கிறது. என்னவோ செய்'' என்று கூறிவிட்டு வெளியேறினார் அப்பா.

ரமேஸ் ஒரு மூலையில் உட்கார்ந்து விம்மி விம்மி அழுதான். அப்பா அடித்தது நன்றாக வலித்தது.ஆனால், அவர் எதற்காக அடித்தார் என்பதை எண்ணிப் பார்க்காத அவன் ''சே! இவருக்குப் போய் மகனாகப் பிறந்தேனே. எது செய்தாலும் குற்றம். எதைச் செய்தாலும் அடிக்கிறதுதான் இவருக்கு வழக்கம். விநோத்தோட அப்பா எவ்வளவு நல்லவர். அவன் என்ன செய்தாலும் அவனை அடிக்கிறதேயில்லை. அவனோட அவர் எவ்வளவு அன்பு. என் அப்பா மட்டும்தான் என்னைக் கொடுமைப்படுத்துறார்'' என்று எண்ணினான்.

(மிகுதி அடுத்த இதழில்...)

பு.கிஷாந்தி,
தரம்-10', கிரேக் த.ம.வித்.,
பண்டாரவளை.

## பிளாஸ்டிக் பயன்பாடும், சூழலில் ஏற்படும் தாக்கமும்



இன்று மூன்றாம் உலக நாடுகளை பிளாஸ்டிக் பொருட்கள் ஆக்கிரமித்துள்ளன. ஆனால், இதன் அபாயத்தை அநேகர் இன்றுவரை அறிந்ததாகத் தெரியவில்லை. அந்தவகையில், எங்கும் சர்வசாதாரணமாகக் காணப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் இன்று அனைத்து வகைகளிலும் மிகுந்த பயன்பாட்டில் உள்ளன. இந்தப் பிளாஸ்டிக்கில் பல கடினமானவை. நீண்ட நாட்கள் நிலைத்திருப்பவை. அத்துடன், அவை இலகுவில் சேதமடைவதுமில்லை, உக்குவதும் இல்லை. நீரில் கரைவதும் இல்லை. இதனால், சுற்றுப்புறச்சூழல் மிகுந்த பாதிப்புக்குள்ளாகின்றது. இவ்வகையான பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவதாலும் அவற்றை வீசி எறிவதாலும் ஆபத்துக்களே அதிகம். இவ்வாறு எறியப்படும் பிளாஸ்டிக் குப்பைகள் அதிகளவில் நச்சுப்பொருட்களையே உற்பத்தி செய்கின்றன. அத்துடன், பிளாஸ்டிக் பொருட்களைப் புதைத்தால் மண் மாசுபடுகிறது. எரித்தாலோ காற்று மாசுபடுகிறது. அத்துடன், இவ்வாறான பிளாஸ்டிக் பயன்பாட்டை நாம் உடனடியாகத் தடுத்து நிறுத்திவிடவும் முடியாது. நாம் படிப்படியாக பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைக்கவேண்டும். இவ்வாறு செய்து வருவோமேயானால் பிளாஸ்டிக் பொருட்களுக்கான கேள்வி சந்தையில் குறைவடையும். உற்பத்தியாளர்கள் காலப்போக்கில் அதிக லாபம் தரும் மாற்றுத் தொழில்களில் ஈடுபடுவார்கள். ஆகவே, நாம் சிந்தித்து செயற்படுவோமானால் பிளாஸ்டிக் பயன்பாட்டை முற்றாக நிறுத்திவிடலாம்.

ந.ற.பா.சஜினா, தரம் - 10C,
அல்-மனார் மத்.கல்., மருதமுனை.

## சூழலைப் பாதுகாப்போம்



இறைவன் அளித்த அருட்கொடைகளில் சூழலும் ஒன்று. இயற்கை அரண்கள், மண்வளம், நீர்வளம், காற்று, உயிரினங்கள், தாவரங்கள் ஒருங்கே அமையப்பெற்ற தொகுப்பே சூழலாகும். சூழலில் பிரதானமாக இயற்கைச் சூழல், செயற்கைச் சூழல் என இரண்டு பிணைப்புக்கள் உள்ளன.

இயற்கைச் சூழல் எனும்போது, இறைவன் எமக்களித்த அனைத்து இயற்கை வளங்களும் உள்ளடங்கும். செயற்கைச் சூழல் எனும்போது, மனிதனால் உருவாக்கப்பட்ட அனைத்து வளங்களும் உள்ளடங்கும்.

சூழலைப் பேணுவதில் ஒவ்வொரு தனி மனிதனும் அதேபோல சமூகமும் ஒருங்கிணைந்து பல நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அந்த வகையில், மாணவர்களாகிய நாம் சூழலைப் பாதுகாப்பதில் எமது பங்களிப்பை வழங்கவேண்டும். சூழலைப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டால் நோய்நொடி இன்றி சுகமாக வாழலாம். எனவே, எமது சூழலைச் சுத்தமாக வைக்கப் பழகிக்கொள்வோமாக.

எஃப்.பெரோஸா, தரம்-9,
குளி/இஹல கினியம மு.ம.வித், வீரபொகுண.

## ஒழுக்க சீலமே வாழ்க்கையின் அணிகலன்

இன்றைய நவீன உலகில் அவரவர் தமது வசதிக்கேற்ப வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இன்று கல்வி, தொடர்பாடல், போக்குவரத்து என அனைத்துத் துறைகளும் முன்னேற்றமடைந்து காணப்படுகின்றன. எனினும், ஒழுக்க சீலமே எல்லாவற்றையும் நிர்ணம் செய்கின்றது.

வீதியோர ஆண்டி தொட்டு, நாட்டை ஆளும் அரசன் வரை அனைவரும் ஒழுக்கசீலம் கொண்டு ஒழுகினாலே அவர்களுக்குரிய சிறப்புக் கிடைக்கும்.

''ஒழுக்கத்தோடு சேர்ந்த கல்வியே பயனுடையது'' என்பது யாம் அறிந்த கூற்றே. நாம் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கினாலும் எம்மிடம் ஒழுக்கம் இல்லையெனில் எமக்கு மதிப்பேயில்லை.

''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்பது திருவள்ளுவர் வாக்கு. அதாவது எமது உயிருக்கு உள்ள மதிப்பைவிட ஒழுக்கம் மிகுந்த மதிப்புடையது.

ஒழுக்கம் உடையோரே மக்கள் என்றும் ஒழுக்கம் அற்றோர் மாக்கள் எனவும் கூறப்படுவதுண்டு. ஒரு மனிதனின் உயர்வு, தாழ்வுகளைத் தரநிர்ணயம் செய்வது அவனிடம் குடிகொண்டிருக்கும் ஒழுக்கமே.

எனவே, நாமும் ஒழுக்கத்தை எமது அணிகலனாக்கிக் கொண்டு சீரிய வாழ்வைப் பெற முயற்சிப்போமாக!

என்.எப்.அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்., மருதமுனை.

## எங்கள் பாடசாலை



சப்ரகமுவ மாகாணத்தில் கேகாலை மாவட்டத்தில் மாவனல்லை பிரதேச செயலாளர் பிரிவில் ஹெம்மாதகமை பிரதேசத்தில் மலைகளாலும் நீரோடைகளாலும் சூழப்பட்ட அழகிய கொடேகொட கிராமத்தின் மத்தியில் 'கே/மாவ கொடேகொட முஸ்லிம் வித்தியாலயம்' எனும் எங்கள் பாடசாலை அமைந்துள்ளது.

இப்பாடசாலை 1977 ஆம் ஆண்டு ஜூலை 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இங்கு 300 க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்பதோடு, சுமார் 20 ஆசிரிய, ஆசிரியைகள் கல்வி கற்பித்து வருகின்றனர்.

வருடாவருடம் விளையாட்டுப் போட்டி, தமிழ், ஆங்கில மொழித் தினப் போட்டிகள், சமூகக் கல்விப்போட்டி போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் எங்கள் பாடசாலை மாணவ, மாணவிகள் பங்குபற்றி வலய, மாகாண, அகில இலங்கை மட்டத்தில் இடங்களைப் பெற்றுள்ளனர்.

எங்கள் பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய பலர் வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர்,ஆசிரியர்களாக நாட்டின் பல பாகங்களிலும் சேவையாற்றி வருகின்றனர். எமது பாடசாலையின் தற்போதைய அதிபரான ஏ.சி.எம். அஸ்ஹர் அவர்களது நிர்வாகத்தின்கீழ் எமது பாடசாலையின் கல்வி, ஒழுக்க மேம்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

பாத்திமா றிஸ்வானா ரவுஃப்,
கே/மாவ கொடேகொட மு.வித்., ஹெம்மாதகம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து போர்த்திருவிழா

பீரங்கிகள் முழங்குகின்றன.... ஆயுதம் தரித்த நூற்றுக்கணக்கான வீரர்கள் 15 ஆம் நூற்றாண்டுக் கோட்டையை முற்றுகையிடு கிறார்கள். கோட்டை மேலிருக்கும் வீரர்கள், அவர்கள் மீது அம்புகளை மழையா கப் பொழிகிறார்கள். இது ஒரு திரைப்படக் காட்சியல்ல. பல நூற்றாண்டு களுக்கு முன் நடைபெற்றதை மீண்டும் நனவாக்கும் 'போர்த் திருவிழா'. இங்கிலாந்தில் 500 ஏக்கர் பசுமையான பரப்பின் நடுவே அமைந்திருக்கும் 'ஹெர்ஸ்ட்மான்சியக்ஸ் அரண்மனை'யில் இது கொண்டாடப்படுகிறது.

மத்திய காலத்தை நினைவுகூரும் வகையில் மிகுந்த உற்சாகம், ஆரவாரத்துடன் கடந்த 1993 ஆம் ஆண்டு முதல் இந்தத் திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஓகஸ்ட் மாதம் நடைபெறும் இத்திருவிழாவைக் காண அதிகளவிலான பார்வையாளர்கள் வருகின்றனர்.

இதில், 15 ஆம் நூற்றாண்டு இங்கிலாந்தை அப்படியே கண்முன் நிறுத்தும் நிகழ்வுகள் இங்கு நடைபெறுகின்றன. கம்பீரமான வீரர்கள் குதிரை மீது அமர்ந்து வருகிறார்கள். வில் வித்தைப் போட்டி களில் ஐரோப்பாவின் மிகச் சிறந்த வில்வித்தை வீரர்கள் பங்கேற்கின்றனர். அக்கால வீரர்களைப் போல ஆடை அணிந்தவர்கள், பழங்கால ஆயுதங் களைக்கொண்டு கடுமையாகச் சண்டையிடுகிறார் கள். சுற்றிலும் பெரும் அகழியால் பாதுகாக்கப்பட்ட கோட்டையைத் தாக்கி உள்ளே நுழைகிறார்கள்.

இங்குள்ள சந்தையில், மத்திய காலத்தைச் சேர்ந்த பொருட்கள் விற்கப்படு கின்றன. பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் இடம்பெறு கின்றன. அதில், அந்தக் காலத்தைச் சேர்ந்தவர்களை போல ஒப்பனை செய்த இசைக்கலைஞர்கள் இன்னி சையை இசைக்கிறார்கள், உயரமான 'கட்டைக் கால்களில்' நடக்கிறார்கள், நெருப்பை உமிழ்கிறார்கள். இவை அனைத்தும் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்கின்றன. தாங்கள் பழங்காலத்துக்கே சென்று திரும்பியது போல இருக்கிறது என்று அவர் கூறுகின்றனர்.



# விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3625
த.வினோத், தரம் - 3$^{C}$, சென்.ஜோன்ஸ் கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3626
ஐ.சௌமியா, தரம் - 6, கனகரத்தினம் மத்.ம.வித்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3627
க.ஜெனோஜன், தரம் - 8, மு.தமிழ் வித்., முள்ளியவளை.


அங்.இல: 3628
சி.கபிலினி, தரம் - 12$^{(கலை)}$, குடியிருப்பு கலைமகள் ம.வித்., மட்டக்களப்பு.


அங்.இல: 3629
எஃப்.சுலைஹா, தரம் - 8$^{F}$, அல்-ஃபாஸியதுல் நஸ்ரியா ம.வித்., பேருவளை.


அங்.இல: 3630
கே.மௌஷிகா, தரம் - 4$^{A}$, அளுத்கம மு.பாட., அளுத்கம.


அங்.இல: 3631
எஸ்.அத்தீக், தரம் - 4, ஹிஜ்ரா வித்., ஓட்டமாவடி.


அங்.இல: 3632
எஸ்.சோபனா, தரம் - 11, ப.ம.ம.வித்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3633
ஹில்மா முர்ஸித், தரம் - 10$^{B}$, ஃபாத்திமா மு.ம.கல்., கொழும்பு.


அங்.இல: 3634
ஜெ.கிதுர்சிகன், தரம் - 6$^{A}$, இந்துக் கல்., திருகோணமலை.


அங்.இல: 3635
எம்.அஸ்மி, தரம் - 8$^{B}$, சிராஜ் மு.ம.வித்., திருகோணமலை.


அங்.இல: 3636
இ.ஷைலேந்திரன், உயர் தரம், வ.ஆ.ம.வித்., வடலியடைப்பு.


## துஷாரா கலைவட்டம் - 2010

## எக்ரோன் அகில இலங்கை சித்திரப் போட்டி

**(இலங்கையில் 15 பிரிவுகளின் கீழ் நடத்தப்படுகின்ற ஒரேயொரு மிகப்பிரமாண்டமான சித்திரப்போட்டி)**

எக்ரோன் நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடனும் விஜய், விஜய, பிலிந்து பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடனும் துஷாரா கலைவட்டத்தினால் அகில இலங்கை ரீதியில் சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களுடன் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்படும். மேற்படி போட்டி தொடர்பான விபரங்களும் நிபந்தனைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**போட்டி விதிமுறைகள்**

- அளவு - அங்குலம் 14×18 அளவு
- வர்ணம் - சோக் (வர்ணப்பூச்சு), ஒயில் பெயின்ட், போஸ்டர் பெயின்ட், வோட்டர் கலர்ஸ் ஆகியனவற்றில் விரும்பியதைப் பயன்படுத்தலாம்.
- தலைப்பு - எந்வொரு தலைப்பிலும் சித்திரங்களை வரையலாம்.
- ஒருவர் ஆகக்கூடியதாக 5 சித்திரங்களை அனுப்பி வைக்கலாம்.
- பிரிஸில் போர்ட், கென்வஸ் துணி, ட்ரொயிங் பேப்பர் இவற்றில் விருப்பமான ஒன்றில் சித்திரத்தை வரையலாம்.

**போட்டிப் பிரிவுகள்**

- முன்பள்ளி மாணவர்கள் (5 வயதிற்குக் கீழானோர்)
- பாடசாலை மட்டத்தில் - தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையில் (13 பிரிவுகள்)
- பகிரங்க போட்டிப் பிரிவு - பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது வேறு எவரும் (18 வயதிற்குக் கீழ்)

நீங்கள் இந்தப் போட்டியில் Acron தயாரிப்பான எந்தவொரு வர்ணத்தையும் (சோக், வோட்டர் கலர்ஸ், போஸ்டர் கலர், ஒயில் பெயின்ட்) பயன்படுத்தினீர்களாயின் அவற்றின் அட்டைப் பெட்டியில் காணப்படும் வெள்ளை நிற லேபிளை சித்திரத்தின் பின்புறம் ஒட்டி அனுப்பவும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படாத 2500 சித்திரங்களுக்குரிய சான்றிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். Acron குறியீட்டு இலச்சினை ஒட்டப்பட்டுள்ள சித்திரங்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

| **பரிசுத் தெரிவுகள் ( அகில இலங்கை)** | | |
|---|---|---|
| *முதலாவது இடத்தைப் பெறும் 15 பேர்* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக (தரம் 1 முதல் தரம் 13 வரை)* | *கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *இரண்டாவது இடத்தைப் பெறும் 15 பேர்* | *தெரிவிற்கு ஒருவர் வீதமாக* | *கிண்ணம்,வெள்ளிப்பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *மூன்றாவது இடத்தைப் பெறும் 15 பேர்* | *பிரிவுக்கு ஒருவர் வீதமாக* | *கிண்ணம், வெண்கலப் பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *Acron ஒயில் பெயின்ட் 15 போட்டியாளர்கள்* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதம்* | *கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *Acron அதிவிசேட வெற்றியாளர்கள் 15* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக* | *கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *Acron விசேட வெற்றியாளர்கள் 150* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக* | *தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *Acron சான்றிதழ் பெறுவோர் 400* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக* | *விருது, சான்றிதழ்* |
| *திறமைச்சான்றிதழ் 2000* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக* | *விருது, சான்றிதழ்* |

Acron லேபிள் ஒட்டப்பட்ட 100 சித்திரங்களை அனுப்பச் செய்கின்ற ஆசிரிய, ஆசிரியைமாருக்கு நினைவுச் சான்றிதழும் ஊக்குவிப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.

(இதற்கென குறிப்பிட்ட 100 சித்திரங்களுடன் ஆசிரியர்/ஆசிரியையின் பெயர், முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியனவற்றைக் குறிப்பிடல் வேண்டும்)

சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலுமான நடுவர்களாலேயே வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர் நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

வெற்றியாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படுவதுடன், 'விஜய்' பத்திரிகையிலும் தொலைக்காட்சி, வானொலி மூலமும் அறிவிக்கப்படும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படுகின்ற 2500 சித்திரங்களும் தேசிய கலாபவனத்தின் பிரதான மண்டபங்கள் இரண்டிலும் கண்காட்சிக்கு வைக்கப்படுவதுடன் குறித்த 2500 சித்திரங்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் வைத்து வழங்கப்படும்.

**போட்டி முடிவுத்திகதி 2010 ஜூலை 31.**

**முகவரி:** துஷாரா கலைவட்டம், இலக்கம் - 16/19, பிங்ஹேன, பன்னிப்பிட்டி.
அல்லது கலர் கிராஃப்ட் லங்கா, 119, பெங்க்ஷால் வீதி, கொழும்பு-11.

**தொடர்புகளுக்கு** - 011 4962520, 0714483704.

## துஷாரா கலைவட்டம்

THUSHARA KALA KAVAYA

Color CRAFT

**அகில இலங்கை சித்திரப்போட்டி-2010**

Acron All Island Art Competition

விஜய்

| விண்ணப்பப்படிவம் | Application Form |
|---|---|
| போட்டியாளரின் பெயர்: Applicant's Name : | |
| முன்பள்ளி/பாடசாலை/ பல்கலைக்கழகம்/பகிரங்க : Pre School, Schools, University & Open Category : | |
| பிறந்த திகதி: Date of Birth : | |
| ஆண்/பெண் Sex : | ஆண் Female ☐ பெண் Male ☐ |
| வீட்டு முகவரி: Personal Address : | |
| தொலைபேசி இல: Telephone : | |
| வகுப்பு: Grade : | |
| சித்திரத்தின் தலைப்பு: Topic : | |
| பாவித்துள்ள வர்ணம்: Medium of Expression Oil, Water color, Poster CLR, Pastels : | |

.................................... .................................... ....................................

போட்டியாளரின் கையொப்பம் Applicant's Signature | திகதி Date | பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் Parents/Guardians Signature

பிரதான அனுசரணை: Acron COLSTAR

ஊடக அனுசரணை: விஜய்

சித்திரக்கலையின் பேரபிமானம் பெற்ற முதன்மையாளர்களான துஷாரா கலைவட்ட அமைப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வெட்டித்துறை-மனாங்கானை திருமகள் முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் ஸ்ரீபராசக்தி அம்மன் ஆலயக் குரு உலக விக்னேஸ்வரக் குருக்கள் மங்கல விளக்கேற்றுவதையும் வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் அருகில் நிற்பதையும் விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமான விநோத உடைப்போட்டி கீழ்ப்பிரிவில் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்ற மனோகரன் பிங்கலனையும் படங்களில் காணலாம்.

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



திக்குவெல்லையைச் சேர்ந்த முஹம்மட்-அஸீமா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா ஆய்ஷா, 16.06.2010 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: ஜெஸ்மா காதர்)



பெரியநீலாவணை-02, மருதமுனையைச் சேர்ந்த அமானுல்லாஹ்-றுபைதா தம்பதியரின் செல்வப் புதல்வன் அ.எம்.அஹ்னஃப், 20.06.2010 அன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை வாப்பா, உம்மா உட்பட உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.முபஸ்ஸிர்,
தரம் - 2A, அந்-நூர் தே.பாட.,
வாழைச்சேனை.



என்.செல்வி,
தரம் - 9, தமிழ் அரங்கக் கல்.,
கனகபுரம்.



எஸ்.தர்சன்,
தரம் - 1, பண்டாரபொல த.வித்.,
மாத்தளை.



கே.நிகோலின்,
தரம் - 6G, கிங்ஸ்டன் ச.பாட.,
கொழும்பு-15.



ஸியா,
தரம் - 7A, அல்-மனார் தே.பாட.,
கொழும்பு-09.



எம்.சஃபீர்,
தரம் - 8A, அல்-ஹிரா மு.ம.வித்.,
அக்கரை.



சி.தனுஷன்,
தரம் - 8, விபுலானந்தா த.ம.வித்.,
கொழும்பு.



எஃப்.பஹ்மிதா, தரம் - 10,
தித்தவெல்காலை மு.வித்.,
குருநாகல்.





ரா.திவாகர், தரம் - 8T,
புனித சில்வெஸ்டர் கல்.,
கண்டி.



எம்.அக்ரம்,
தரம் - 9C, ஸாஹிரா தே.கல்.,
புத்தளம்.




ரேகைகளை பயன்படுத்தி ஓவியம் வரையும் முறை பற்றி சென்ற பாடத்தில் பார்த்தோம். அதன்படி, இவ்விதழில் ரேகைகளைக்கொண்டு மேலும் சில பயிற்சிகளைச் செய்வோம்.




ரேகைகள் வரையும்போது சில பிழைகள் வரலாம் அல்லது ரேகைகள் தேவைக்கேற்றவாறு அமையாமல் போகலாம். இவை நமது பயிற்சியின்மையால் ஏற்படுவதாகும். எனவே, அதனையிட்டு சோர்ந்துவிடாது விட்ட பிழையைத் திருத்திக்கொள்வதற்காக பலமுறை பயிற்சி பெற வேண்டும். காலப்போக்கில் உங்கள் கரங்கள் எதையும் சரியான வழியில் வரைவதற்குத் தானாகவே பழக்கப்பட்டுவிடும்.

ரேகைகளைப் பயன்படுத்தி அமையும் பயிற்சிகளில் இம்முறை மனிதனின் கைகளை வரைந்து பழகுவோம். அதன்படி, ரேகைகளைக்கொண்டு கைகளின் பல்வேறு அசைவுகள் வரையப்பட்டுள்ள அமைப்புகளை படத்தில் காணலாம். இவைதவிர, மேலும் பல முறைகளில் கைகளின் அசைவுகளை ரேகைகள் மூலம் வரையலாம்.

### கவனத்தில்கொள்க...

- ரேகைகள் வரையப்படும் இலகுவான முறையும் ரேகைகளைக்கொண்டு கைகளின் அமைப்புகளை, பல்வேறு நிலைகளில் வரையும் முறைகளும் இங்கு காட்டப்பட்டுள்ளன.
- இந்த [illegible] பல்வேறு [illegible] கேற்றவாறு வரைந்து பாருங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருந்திய மனம்



அன்று அந்த பாடசாலைக்கு புதிதாக மாற்றலாகி வருகிறார் ஆசிரியர் முத்துக்குமார். அவர் மிகவும் கண்டிப்பான ஆசிரியர் என்று பெயரெடுத்தவர். அவரைப் பற்றி ஏழாம் வகுப்பு மாணவர்கள் கூடிக்கூடிப் பேசிக் கொண்டனர்.

அன்புமணி மிகவும் சாதுவான மாணவன். அதேசமயம் படிப்பில் கெட்டிக்காரன். வகுப்பில் எப்போதுமே முதல் மாணவன் அவன்தான். அதனால், எல்லா ஆசிரியர்களாலும் மிகவும் விரும்பப்பட்டான். ஆனால், அதே வகுப்பில் படிக்கும் ஜீவா முரட்டுத் தனமானவன். யார் பேச்சையும் கேட்கமாட்டான். தனக்கென்று சில நண்பர்களை சேர்த்துக்கொண்டு ஜீவா செய்கின்ற அடாவடிச் செயல்களுக்கு அளவே இல்லை. அவனுக்கு ஏனோ அன்புமணியை எப்போதுமே பிடிக்காது. அவனை ஆசிரியர்கள் பாராட்டும் பொழுது கடைசிப் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு முணுமுணுத்துக்கொண்டே இருப்பான். அன்புமணிக்குத் தன்னாலான தொல்லைகளைக் கொடுத்துக்கொண்டே இருப்பான்.

ஒருமுறை ஜீவா, அன்புமணியின் கணிதக் கொப்பியில் மையைக் கொட்டி விட்டு ஒன்றும் தெரியாதவன்போல் இருந்துவிட்டான். அன்புவுக்கு அதைச் செய்தது ஜீவாதான் என்று தெரிந்தும் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால், அதைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு ஒருநாள் அவனுடைய இருக்கையில் ஆணியைச் செருகி வைத்துவிட்டான் ஜீவா. அது அன்புமணியின் பின்புறத்தைப் பதம் பார்த்துவிட்டது. இப்படியே சில நாட்கள் ஓடின.

அன்றுதான் ஆசிரியர் முத்துக்குமார் முதன்முதலாக அந்த வகுப்பு மாணவர்களுக்கு வகுப்பு எடுக்கப் போகிறார். அவர் ஏழாம் வகுப்பு அறையில் நுழைந்து தன்னை அறிமுகம் செய்துகொண்டார்.

"என் அன்பிற்குரிய மாணவச் செல்வங்களே, நீங்கள் என்னைப் பற்றிக் கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதான். நான் கண்டிப்பானவன்தான். ஆனால், எந்த மாணவர்கள் படிப்பிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்குகிறார்களோ அவர்களுக்கு நான் பரிசு கொடுப்பதையும் வழக்கமாக வைத்திருக்கிறேன். எனவே, நீங்கள் தப்புச் செய்யாமல் ஒழுங்காகப் படிப்பில் கவனம் செலுத்துங்கள். உங்கள் எல்லோருக்கும் என் வாழ்த்துக்கள்!" என்று கூறினார்.

பின்னர், முதல் மாணவனான அன்புமணியை அழைத்து 'வகுப்புத் தலைவன்' ஆக்கினார். அப்போது, "இதோ பார் அன்பு... வகுப்பில் ஆசிரியர் இல்லாத நேரத்தில் யார் சரியாக வகுப்பை வழிநடத்திச் செல்கிறார்களோ, அவர்களே லீடராக இருக்கத் தகுதி பெற்றவர்கள். இந்த வகுப்பில் எந்த ஒரு தவறு நடப்பினும் அதற்கு நீயே பொறுப்பு. தவறு நடந்தால் நான் உன்னைக் கடுமையாகத் தண்டிப்பேன். நினைவிருக்கட்டும்!" என்று கூறிவிட்டு வகுப்பைத் தொடங்கினார்.

ஒருவாரம் வரையிலும் எந்தவித பிரச்சினையும் ஏற்படவில்லை. ஆனால், அதற்கடுத்த வாரம் ஆசிரியரின் இருக்கையில் யாரோ பசையைத் தடவி வைத்துவிட்டார்கள். ஆசிரியர் முத்துக்குமார் வந்து அமர்ந்ததுமே அதை உணர்ந்தார். அவர் உடையெங்கும் பசை ஒட்டிக்கொண்டது.

அன்புமணியை அழைத்து விசாரித்தார் ஆசிரியர். அதற்குள் மற்ற மாணவர்கள் வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்க ஆரம்பித்துவிட்டனர். "என்ன அன்பு... யார் இதைச் செய்தார்கள்? உண்மை தெரியாவிட்டால் நான் வகுப்பு எடுக்கமாட்டேன்" என்று சத்தம் போட்டார் ஆசிரியர் முத்துக்குமார்.

உடனே அன்புமணி அமைதியாக "சேர்... ஒரு நோட்டீஸ் ஒட்டுவதற்காக காலையில் தலைமை ஆசிரியர் அறையில் இருந்து பசையை எடுத்து வந்து மேசை மேல் வைத்தேன். அது ஒருவேளை தவறிக் கொட்டியிருக்கலாம்" என்றான்.

"ஓகோ.. அப்ப யாருமே தவறு செய்யவில்லை என்கிறாயா?"

"ஆமாம் சேர். இந்த தவறுக்கு நானே பொறுப்பு. நீங்கள் எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்கிறேன்" என்றான் அன்பு.


"அவ்வளவு தைரியமா உனக்கு? தலைமை ஆசிரியரிடம் கூறி நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன் பார்" என்று மிகக் கடுமையாகக் கூறினார் ஆசிரியர் முத்துக்குமார்.

அன்புமணி கண்களில் நீர் தளும்ப அப்படியே நின்றுகொண்டிருந்தான். அப்போது கடைசி பெஞ்சில் இருந்த ஜீவா எழுந்து நின்று, "சேர் என்னை மன்னியுங்கள். எல்லா தவறுகளுக்கும் நானே காரணம். அன்பு பெயருக்கேற்றாற்போல் அன்பு ஒன்றே சிறந்தது என்று உணர்ந்து என்லோரிடமும் அன்பு செலுத்துபவன். அவனுக்கு நான் தீங்கிழைத்த போதும் அவன் என்னைத் திட்டியதில்லை. இப்போதும், நாற்காலியில் பசையைக் கொட்டியவன் நான் என்று தெரிந்தும் என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை. எனவே, அவனை மன்னித்து எனக்கு தண்டனை கொடுங்கள்' என்று கண்ணீரோடு கூறினான்.

ஆசிரியரோ, "எப்போது உன் தவறுகளை நீ உணர்ந்து விட்டாயோ அப்போதே நீ திருந்திவிட்டாய். இனிமேல் நல்ல பிள்ளை என்று பெயரெடு" என்று வாழ்த்தினார். அன்புமணியை மெச்சும் விதமாக அவனைத் தட்டிக்கொடுத்தார்.

# புத்திசாலி இவான்

ரஷ்ய நாட்டுக்கதை 10



அரசர் திருதிருவென விழித்தபடி, ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினார். பின்னர் அவர் இளவரசி அல்யோனாவைப் பார்த்து பெருங்கடலின் அடியிலிருக்கும் உனது கோச் வண்டிக்கு நான் எப்படிச் செல்வது?" என்று கேட்டார்.

"அதை எப்படிச் செய்யப் போகிறீர்கள் என்பதைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை" எனக் கூறிவிட்டு அவள் விரைவாகத் தனது அறைக்குள் சென்றுவிட்டாள். அரசர் தனிமையில் விடப்பட்டார். அப்போது, வயதில் இளைய, அறிவில் மூத்த இவானே



# கடற்குதிரைகளால் ஆபத்து என அச்சம்!

அவரின் நினைவுக்கு வந்தான்.

இவானை அழைத்து வரும்படி கட்டளையிட்டார்.

"வயதில் இளைய, அறிவில் மூத்த எனது நம்பிக்கைக்குரிய ஊழியன் இவானே, நான் சொல்வதைக் கேள். இளவரசி அல்யோனாவின் திருமண மோதிரத்தையும் கோச் வண்டியையும் என்னிடம் கொண்டு வா. மோதிரம் அவளது பெட்டியிலும் பெட்டி அவளது கோச் வண்டியிலும் கோச் வண்டி புயான் தீவுக்கு அருகே உள்ள பெருங்கடலின் ஆழத்திலும் உள்ளன. மோதிரத்தையும் கோச் வண்டியையும் நீ எனக்குப் பெற்றுத் தந்தால், என் நாட்டின் மூன்றில் ஒரு பகுதியை உனக்கு நான் அளிப்பேன்"

வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் இதற்குப் பதில் கூறினான்; "அரசரே, நான் திமிங்கிலம் அல்ல. மோதிரத்தையும் கோச் வண்டியையும் தேடி கடலின் ஆழத்திற்குள் செல்வதற்கு. எப்படி நான் அங்கு போகமுடியும் அரசரே?"

இதனால், சீற்றமடைந்த அரசர் தனது பாதங்களைத் தரையில் ஓங்கி மிதித்தார்; "இந்த மாதிரியான பேச்சு வேண்டாம்! இங்கே அரசர் யார்? நீயா நானா? உத்தரவிட்டது நான், கீழ்ப்படிய வேண்டியது நீ! மோதிரத்தையும் கோச் வண்டியையும் எனக்குத் தந்தால், தாராளமாக உனக்குப் பரிசளிப்பேன். நீ கொண்டுவரவில்லை என்றால், உன் தலையை சீவிவிடுவேன்"

இவான் மிகுந்த துயரத்துடன் லாயத்துக்குச் சென்று தங்கப் பிடரிமயிர் கொண்ட பெண் குதிரைக்குச் சேணம் பூட்டிய போது அது கேட்டது; "நீ எங்கே போகப் போகிறாய் எஜமானே?"

"இன்னமும் எனக்குத் தெரியாது குதிரையே. ஆனால், நான் போயாக வேண்டும். இளவரசியினுடைய மோதிரத்தையும் கோச் வண்டியையும் கொண்டு வரும்படி அரசர் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். [illegible] அவளது பெட்டியிலும் பெட்டி அவளது கோச் வண்டியிலும் கோச் வண்டி புயான் தீவுக்கு அருகே பெருங்கடலின் அடியிலும் உள்ளன. அவசியம் அங்கு நாம் போயாகவேண்டும்.

இதற்குத் தங்கப் பிடரிமயிர் கொண்ட பெண் குதிரை சொன்னது; "நாம் இதுவரை செய்தவற்றைவிட இது மிகவும் கடுமையான வேலை. தூரம் அதிகம் இல்லை, ஆனால் துயரத்தில் முடியலாம். கோச் வண்டி எங்கே இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். ஆனால், அதை அடைவது சிரமம். அங்குள்ள கடற் குதிரைகள் என்னைப் பார்க்காதிருந்தால் பெருங்கடலின் ஆழத்திற்குள் சென்று கோச் வண்டியை நானே இழுத்து வருவேன். ஆனால், அவை என்னைப் பார்த்துவிட்டால், துண்டம் துண்டமாக என்னைக் கிழித்துவிடும். பின்னர் உன்னால் என்னையோ, அந்தக் கோச் வண்டியையோ ஒருபோதும் பார்க்கமுடியாது"

இதனால், வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் மிகுந்த சிந்தனையில் ஆழ்ந்தான். உரிய வழி கண்டுபிடிக்கும் வரை சிந்தித்துக்கொண்டே இருந்தான். அரசரிடம் போய்க் கூறினான்; "அரசரே, எனக்குப் பன்னிரண்டு மாட்டுத்தோல்கள், தார் பூசப்பட்ட கயிறு இருநூறு கிலோகிராம், இருநூறு கிலோகிராம் தார் மற்றும் ஒரு கொப்பரை தேவை"

"தேவையான எதையும் நீ [illegible]. ஆனால், விரைந்து உன் பணியை முடி" என்றார் அரசர்.

வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் மாட்டுத்தோல்கள், கயிறு, பெரிய தார்க்கொப்பரை ஆகியவற்றை ஒரு வண்டியில் ஏற்றி, தனது குதிரையை அதில் பூட்டி புறப்பட்டுச் சென்றான்.

"கடற் குதிரைகள் உன்னைப் பார்த்தாலும் மாட்டுத் தோல்களின் ஊடாக அவ்வளவு விரைவாக அவற்றால் உன்னைக் கடிக்க முடியாது" என்றான் இவான். மாட்டுத்தோல்களால் குதிரையை நன்கு மறைத்து, கயிற்றால் கட்டினான். பின்னர் தாரை உருக்கி மேலே ஊற்றினான்.

"இப்போது கடற் குதிரைகளால் எனக்குத் தீங்கு செய்யமுடியாது. இங்கேயே மேய்ச்சல் நிலத்தில் தங்கி மூன்று நாட்கள் எனக்காகக் காத்திரு. இசைக்கருவி ஒன்றை வாசித்துக் கொண்டிரு. கண்ணை மூட வேண்டாம்" என்று தங்கப் பிடரிமயிர் கொண்ட பெண் குதிரை கூறியது.

அத்துடன், அது கடலுக்குள் விரைந்து சென்றது. வயதில் இளைய அறிவில் மூத்த இவான் கடற்கரையில் தனிமையில் விடப்பட்டான். ஒருநாள் கழிந்தது. இரண்டாம் நாளும் கழிந்தது. இன்னமும் அவன் விழித்திருந்து தனது இசைக்கருவியை வாசித்துக்கொண்டு கண்களை மூடாதிருந்தான். ஆனால், மூன்றாவது நாளில் தூக்கம் வருவது போல உணர்ந்தான். இசைக்கருவியால் அவனுக்கு உதவ முடியவில்லை. சற்று நேரத்திற்குத் தூக்கதோடு போராடினான். ஆனால், இறுதியாகத் தூக்கம் அவனை வென்றுவிட்டது. அவனை அறியாமலேயே அவன் தூங்கிப் போய்விட்டான். **(தொடரும்...)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் மாலாவுக்கும் சீதாவுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**මාලා:** ආ... සීතා එන්න එන்න. හුඟ දවසකින් ඔයා ආවේ.
ஆ.... சீதா என்ன என்ன ஹுங்க தவசகின் ஒயா ஆவே.
மாலா: ஆ.... சீதா வாருங்கள் வாருங்கள். வெகுநாட்களுக்குப் பிறகு வந்திருக்கிறீர்கள்.

**සීතා:** ඔව් මාලා එන්න බැරිවුණා. වැඩ හරියට.
ஒவ் மாலா என்ன பெரிவுனா. வெட ஹரியட.
சீதா: ஆம் மாலா வர முடியவில்லை. சரியான வேலை.

**මාලා:** අද මොකද මේ පැත්තේ?
அத மொகத மே பெத்தே?
மாலா: இன்று என்ன இந்தப் பக்கம்?

**සීතා:** ඔයාට පොඩි ආරාධනාවක් කරන්න ආවේ.
ஒயாட பொடி ஆராதனாவக் கரன்ன ஆவே.
சீதா: உங்களுக்கு சிறிய அழைப்பொன்றை விடுக்க வந்தேன்.

**මාලා:** ඒ මොකද්ද සීතා?
ஏ மொகத்த சீதா?
மாலா: அதென்ன சீதா?

**සීතා:** ලබන ඉරිදා මගේ උපන්දිනය. ඔයා නංගිත් එක්ක දවල් කෑමට අපේ ගෙදර එන්න.
லபன இரிதா மகே உபன்தினய. ஒயா நங்கித் எக்க தவள் கேமட அபே கெதற என்ன.
சீதா: எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை என்னுடைய பிறந்தநாள். நீங்கள் தங்கையுடன் பகல் உணவுக்கு எங்கள் வீட்டுக்கு வாருங்கள்.

**මාලා:** හරි ෂෝක්. මමයි නංගියි අනිවාර්යෙන් එනවා. ඔයා මොනවද බොන්නේ?
ஹரி ஷோக். மமய் நங்கிய் அனிவார்யென் எனவா. ஒயா மொனவத பொன்னே?
மாலா: மிகவும் நல்லது. நானும் தங்கையும் கண்டிப்பாக வருவோம். நீங்கள் என்ன குடிக்கின்றீர்கள்?

**සීතා:** මොකුත් එපා මාලා. මම යන්න ඕනෑ. මට තව වැඩ ටිකක් තියෙනවා කරගන්න. මම ගිහින් එන්නම්.
மொகுத் எபா மாலா. மம யன்ன ஓனே. மட தவ வெட டிகக் தியெனவா கரகன்ன. மம கிஹின் என்னம்.
சீதா: ஒன்றும் வேண்டாம் மாலா. நான் போக வேண்டும். எனக்கு இன்னும் சில வேலைகள் இருக்கின்றன. நான் போய் வருகின்றேன்.

**මාලා:** හොඳයි සීතා ගිහින් එන්න. අපි ඉරිදාට එන්නම්.
ஹொந்தய் சீதா கிஹின் என்ன. அபி இரிதாட என்னம்.
மாலா: நல்லது சீதா போய் வாருங்கள். நாங்கள் ஞாயிற்றுக்கிழமை வருகின்றோம்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

*உதாரணம்:* உங்களுக்கு சிறிய அழைப்பொன்றை விடுக்க வந்தேன்.
**ඔයාට පොඩි ආරාධනාවක් කරන්න ආවේ.**

i. ஞாயிற்றுக்கிழமை என்னுடைய பிறந்தநாள்.
...........................................................................

ii. நானும் தங்கையும் கண்டிப்பாக வருவோம்.
...........................................................................

iii. இன்னும் சில வேலைகள் இருக்கின்றன.
...........................................................................






'**going to**' (வினைச்சொல்) சகிதம் மூல வினைச்சொல் (Stem Verb) கையாளப்பட்டு உருவாக்கப்படுகின்ற எதிர்கால வாக்கியங்களின் (Future Tense) 'உடன்பாடு நிலை' (Affirmative) மற்றும் வினா நிலை (Interrogative) வாக்கியங்களை மேலும் இங்கே பயில்வோம்.

(அ) Rohan is going to send. (Affirmative)
ரொஹான் அனுப்பப் போகின்றான். (உடன்பாடு)

(ஆ) Is Rohan going to send? (Interrogative)
ரொஹான் அனுப்பப் போகின்றானா? (வினா)

(அ) Rohan is going to send that parcel.
ரொஹான் அந்தப் பொதியை அனுப்பப் போகின்றான்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(ஆ) Is Rohan going to send that parcel?
ரொஹான் அந்தப் பொதியை அனுப்பப் போகின்றானா?
(வினா வாக்கியம் - Interrogative))

---

(இ) Lalitha is going to spend. (Affirmative)
லலிதா செலவழிக்கப் போகின்றாள். (உடன்பாடு)

(ஈ) Is Lalitha going to spend? (Interrogative)
லலிதா செலவழிக்கப் போகின்றாளா? (வினா)

(இ) Lalitha is going to spend more money.
லலிதா அதிக பணம் செலவழிக்கப் போகின்றாள்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(ஈ) Is Lalitha going to spend more money?
லலிதா அதிக பணம் செலவழிக்கப் போகின்றாளா?
(வினா வாக்கியம் - Interrogative)

---

(உ) This frog is going to jump. (Affirmative)
இந்தத் தவளை பாயப் போகின்றது. (உடன்பாடு)

(ஊ) Is this frog going to jump? (Interrogative)
இந்தத் தவளை பாயப் போகின்றதா? (வினா)

(உ) This frog is going to jump into the well.
இந்தத் தவளை கிணற்றுக்குள் பாயப் போகின்றது.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(ஊ) Is this frog going to jump into the well?
இந்தத் தவளை கிணற்றுக்குள் பாயப் போகின்றதா?
(வினா வாக்கியம் - Interrogative)

---

(எ) This monkey is going to eat. (Affirmative)
இந்தக் குரங்கு சாப்பிடப் போகின்றது. (உடன்பாடு)

(ஏ) Is this monkey going to eat? (Interrogative)
இந்தக் குரங்கு சாப்பிடப் போகின்றதா? (வினா).

(எ) This monkey is going to eat the fruit.
இந்தக் குரங்கு அந்தப் பழத்தை சாப்பிடப் போகின்றது.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(ஏ) Is this monkey going to eat the fruit?
இந்தக் குரங்கு அந்தப் பழத்தை சாப்பிடப் போகின்றதா?
(வினா வாக்கியம் - Interrogative)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# மெண்டேலாவின் கொள்ளுப் பேத்தி விபத்தில் மரணம்



தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மெண்டேலாவின் கொள்ளுப் பேத்தியான 13 வயதுடைய செனானி மெண்டேலா வாகன விபத்தொன்றில் மரணமடைந்ததாக வெளியான செய்தி தென்னாபிரிக்காவில் பெருந்துயர நிலையை ஏற்படுத்தியுள்ளது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகின்ற உலகக் கிண்ண கால்பந்தாட்டத்தையொட்டிய பயிற்சிக் கண்காட்சிப்போட்டியொன்றைப் பார்த்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கையிலே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

மேலும், உலகக் கிண்ணப் போட்டிகள் ஆரம்பமாவதற்கு 12 மணித்தியாலங்களுக்கு முன்னரே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து பொலிஸார் கருத்துத் தெரிவிக்கையில்; செனானியை அழைத்துச் சென்ற வாகனத்தின் ஓட்டுனர் மதுபோதையில் இருந்துள்ளதாகவும் காயமடைந்த குறித்த ஓட்டுனரை தாம் கைது செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

# ஏழு வயதில் வயோதிபத் தோற்றம்



ஏழு வயதேயுடைய சிறுமியொருவரின் தோற்றம் வயதான பெண்ணொருவரின் தோற்றத்தைக் கொண்டதாக மாறியுள்ள சம்பமொன்று அமெரிக்காவில் நடைபெற்றுள்ளது.

எஷான்ட் எலியட் ஸ்மித் என்ற பெயரையுடைய இந்த சிறுமிக்கு சுகப்படுத்தமுடியாத நோயொன்று ஏற்பட்டுள்ளதாலேயே இந்நிலைமைக்கு அவர் ஆளாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

'ஹச்சின்சன் கில்ஃபர்ட் புரொஜிரியா' என பெயரிடப்பட்டுள்ள இந்த நோயினால் பீடிக்கப்பட்டிருப்பவர்கள் வயதை மீறிய தோற்றத்தைப் பெற்றிருப்பர். அதாவது, நிஜ வயதைவிட எட்டு மடங்கு அதிகமுள்ள வயதின் தோற்றத்தை இது காட்டுவதாகவும் கூறப்படுகின்றது. உதாரணத்திற்கு, 8 வயதான ஒருவரை 80 வயது தோற்றமாக இந்நோய் காட்டுமாம்.

எனவே, இந்த வியாதிக்கு ஆளாகியிருக்கின்ற எஷான்ட் பாடசாலை நண்பிகளுடன் ஆடிப்பாடி விளையாடுகின்ற போதிலும் வயோதிப வயதில் ஒருவர் முகம் கொடுக்க வேண்டிய அத்தரைட்டிஸ், மூட்டுவலி, இருதயக் கோளாறு ஆகிய பாதிப்புக்களுக்கும் அவர் முகம் கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளார்.

இவரது தாயாரான 24 வயதுடைய ஜொபீ எப்போதும் இவரை மகிழ்ச்சியுடன் வைத்திருப்பதிலேயே தமது நேரத்தை செலவிடுகின்றாராம்.

**அற்லஸ் கேள்வி - 261**

**கேள்வி:** வயதிற்கு மீறிய தோற்றத்தைப் பெற்றுள்ள சிறுமியின் பெயர் என்ன?

**சரியான விடை................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 261,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 259 இன்
சரியான விடை: மார்ச் 26**

**பரிசு பெறுவோர்**

எம். ரஸ்மி,
34/4, வில்ஃப்ரட் டவுன், ஹட்டன்.

எஸ். சர்மிளன்,
33, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

எஃப். நஷீஹா,
115, அண்ணல் வீதி,
மாஞ்சோலைச்சேனை, கிண்ணியா - 03.

# க.பொ.த (உ/தர) பொது வினாத்தாள்

**வழங்குபவர்: பரந்தாமன்**



**01. லைலா' என்ற புயல்காற்று தெற்காசிய நாடுகளை 2010 மே மாதம் 3 ஆம் வாரத்தில் தாக்கியது. இதனால், இலங்கையிலும் பாரிய வெள்ளம், மண் சரிவுகள் என்பன ஏற்பட்டன. இப்புயல்காற்றிற்கு 'லைலா' எனப் பெயரிடக் காரணம்;**



i. அது பயங்கர அழிவுகளை இலங்கையிலும் இந்தியாவிலும் ஏற்படுத்தியமை.
ii. 'லைலா' என்பது பெண்பால் பெயராக இருப்பதால் தற்காலப் பெண் பயங்கரவாதி என்பதாகும்.
iii. புயல்களுக்கு பெயரிடும் வழக்கம் உலக வளிமண்டல அமைப்பால் செயற்படுத்தப்படுகின்றது.
vi. புயல்களுக்கு பெயரிடப்படும் வழக்கு அவ்வப்பிராந்தியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
v. தெற்காசியாவில் பாகிஸ்தானுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

**02. டேவிட் கமரோன் ஐ.ராச்சியத்தில் இந்த நூற்றாண்டில் அமைக்கப்பட்ட கூட்டணி அரசின் பிரதமராவார். அவர் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்று எது?**



i. அவர் பழமைபேண் லிபரல் ஜனநாயக கூட்டணியின் பிரதமர்.
ii. அண்மைக்காலத்தில் தெரிவான மிகவும் வயது குறைந்த பிரதமர்.
iii. பழமைபேண் கட்சி 13 வருடங்களின் பின்னர் ஆட்சியைக் கைப்பற்றினாலும் போதியளவு பெரும்பான்மையைப் பெறவில்லை.
vi. டேவிட் கமரோனின் பதவிக்காலம் 2 வருடங்களுக்கு மட்டுமேயாகும்.
v. உதவிப் பிரதமர் லிபரல் ஜனநாயகக் கட்சித் தலைவர் ஆவார்.

**03. செஞ்சட்டைக்காரர்கள் என்பவர்கள் 2010 மே முதல் தாய்லாந்தில் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். இவர்களைப் பற்றிய பிழையான கூற்று எது?**



i. செஞ்சட்டைக்காரர்கள் முன்னாள் பிரதமர் தக்சின் சசினவத்ராவின் ஆதரவாளர்கள்.
ii. உடனடியாக தேர்தல் நடாத்தப்பட வேண்டுமெனப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
iii. இவர்களில் 50 இற்கு மேற்பட்டோர் தாய்லாந்து ராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.
vi. தாய்லாந்தின் மன்னர் ஆட்சிக்கு எதிரானவர்கள்.
v. தாய்லாந்தில் முன்னர் இதே போல தக்சின் சினவத்ராவுக்கு எதிராகவும் போராட்டம் இடம்பெற்றிருந்தது.

**04. பின்வருவனவற்றில் எது இலங்கையின் சூழலுக்கு தீங்கு விளைவிப்பதில் பங்களிக்காதது?**

i. பூகோளம் வெப்பமடைதல்.
ii. ஓசோன் குறைவடைதல்.
iii. விரைவாகும் சனத்தொகைப் பெருக்கம்.
vi. வீதிகளில் வாகனங்களின் ஒலி.
v. காய்கறி உணவை உண்ணுதல்.

**05. பல ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டதன் மூலம் நாட்டின் தலைமைப்பதவியிலிருந்து விலகியிருக்கும் உலக மக்களின் கவனத்தை ஈர்த்த தலைவர்;**

i. ராவுஸ் கெஸ்ட்ரோ
ii. ஹியுகோ சாவேஸ்
iii. விளாடிமிர் புடின்
vi. ஃபிடெல் கெஸ்ட்ரோ
v. ரொபர்ட் முகாபே

**06. பௌத்த சமயக் கொடி உருவாக்கப்பட்டு 125 வருட நிறைவு 2010 இல் கொண்டாடப் பட்டது. பௌத்த கொடி சம்பந்தமான பின்வரும் கூற்றுகளில் பிழையான கூற்று எது?**



i. 1885-04-28 போயா தினத்தில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது.
ii. கோர்னல் ஒல்கேட் என்பவர் தலைமையில் பௌத்த கொடி நிர்மாணிக்கப்பட்டது.
iii. பௌத்த கொடி 5 வர்ணங்களைக் கொண்டது.
vi. ஆங்கில அரசு பௌத்த கொடியை ஏற்றுக்கொள்ளவில்லை.
v. அது பௌத்தர்களின் கலாசார சின்னமாகும்.

**07. இலங்கையில் பல உயிர்களைக் காவு கொள்ளும் டெங்கு நுளம்பை ஒழிப்பதற்கு அண்மைக்காலத்தில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் கீழ் காணும் எந்த நடவடிக்கை பொருத்தமற்றது.**



i. கியூபாவிலிருந்து டெங்கு வைரஸ் ஒழிப்புக் கிருமிகள் கொண்டு வரப்பட்டு பரீட்சிக்கப்பட்டது.
ii. கியூபா கிருமிகளைவிட, ஐ.அமெரிக்க வைரஸ் கிருமிகள் சாலச்சிறந்தது என சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர்.
iii. வீட்டுச் சூழலில் உள்ள சிரட்டைகள், டயர்கள், பூச்சாடியில் தேங்கியுள்ள நீரை அகற்றும் நடவடிக்கைகள்.
vi. டெங்கு நுளம்புகளை ஒழிக்க பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறுதல்.
v. சுற்றாடலை சரியான முறையில் வைத்திருக்காத பொது மக்களை நீதியின்முன் நிறுத்தி தண்டனை வழங்க ஏற்பாடு செய்தல்.

**08. மாலனி ஃபொன்சேகா பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?**



i. மாலனி ஃபொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினர்.
ii. சிங்கள சினிமாத்துறையில் நீண்டகாலம் நிலைத்து பல விருதுகளைப் பெற்றுள்ளார்.
iii. 2010 இல் உலகில் சிறந்த 25 நடிகர்களில் ஒருவராவார்.
vi. மகிந்த ராஜபக்ஷ அரசில் பொறுப்பு வாய்ந்த அமைச்சராவார்.
v. இவர் நடித்த 'ஆகாச குசும்' என்ற திரைப்படம் பல உலக விருதுகளைப் பெற்றுள்ளது.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கால்பந்தாட்டத்தில் எவ்வாறு வாய்ப்புக் கிட்டுகின்றது?



உலகக் கிண்ண கால்பந்தாட்டத்தில் பங்குபற்றும் வாய்ப்பு சுலபமாக கிடைப்பதில்லை. தரவரிசைப்பட்டியலில் முன்னிலையில் உள்ள அணிகளுக்குக் கூட வாய்ப்புக் கிடைக்காத சந்தர்ப்பங்களும் உள்ளன. உலகக் கிண்ணம் என்பதால் அனைத்துக் கண்டங்களிலும் உள்ள நாடுகளும் பங்குபெற வாய்ப்பை அளிக்கிறது சர்வதேச கால்பந்து சம்மேளனம். ஆனால், அனைத்து நாடுகளிடையே பல கட்டங்களில் தகுதிப் போட்டிகள் நடத்தி, அதில் வெற்றி பெறும் அணிகளுக்கே வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

அதன்படி, இந்தத் தடவை ஆசியாவில், ஜப்பான், தென்கொரியா, வடகொரியா, சேர்பியா, ஸ்லேவேனியா, ரஷ்யா என 6 அணிகளும் ,வட அமெரிக்காவில்-அமெரிக்கா, மெக்சிகோ, ஹொண்டுராஸ் என 3 அணிகளும், தென் அமெரிக்காவில்-பிரேசில், பராகுவே, உருகுவே, சிலி, ஆர்ஜென்டீனா என 5 அணிகளும், ஐரோப்பாவில்-இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெய்ன், போர்த்துக்கல், நெதர்லாந்து, டென்மார்க்,ஜேர்மன், இத்தாலி, சுவிட்சர்லாந்து, செக் குடியரசு என 10 அணிகளும், ஆபிரிக்காவில்-அல்ஜீரியா, கெமரூன், கொங்கோ, ஐவரிகோஸ்ட், நைஜிரியா என 5 அணிகளும், ஓசியானாவில்-அவுஸ்திரேலியா நியூசிலாந்து என 2 அணிகளுமாக 31 அணிகள் பங்கேற்கின்றன. போட்டியை நடத்தும் நாடு என்ற அடிப்படையில் தென்னாபிரிக்கா அணி நேரடியாகவே தகுதி பெறுகிறது. முதலாவது உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டியானது 1930 இல் உருகுவே நாட்டில் நடைபெற்றது. அப்போது 13 அணிகள் மட்டுமே கலந்துகொண்டன. இறுதியாட்டத்தில் உருகுவேயும் ஆர்ஜன்டீனாவும் மோதியதில், 4-2 என்ற கோல் கணக்கில் வென்று முதல் உலகக் கிண்ணத்தை வசப்படுத்தியது உருகுவே. இதன்பின், 1934 இல் இத்தாலியிலும் 1938 பிரான்சிலும் போட்டிகள் நடைபெற்றன.

அத்துடன், முதலாம் உலகப்போர் மற்றும் இரண்டாம் உலகப்போர் காரணமாக 12 வருடங்கள் உலகக் கிண்ண கால்பந்துப் போட்டிகள் நடத்தப்படவில்லை. பின்னர், 1950 ஆம் ஆண்டில் பிரேஸில் நாட்டில் மீண்டும் உலகக் கிண்ணப் போட்டிகள் நடத்தப்பட்டன.

## இறுதிப் போட்டியில் அதிக தடவைகள்





உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளில் இறுதிப்போட்டிக்கு அதிக தடவைகள் தகுதிபெற்ற அணி என்ற பெருமையை பிரேசிலும் ஜேர்மனியும் பகிர்ந்துகொள்கின்றன. இந்த இரு அணிகளும் தலா 7 முறை இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றிருக்கின்றன. மேலும், இத்தாலி 6 முறையும் ஆர்ஜன்டீனா 4 முறையும் பிரான்ஸ், நெதர்லாந்து, செக் குடியரசு, ஹங்கேரி தலா 2 முறையும், ஸ்வீடன் ஒரு முறையும் இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்ற நாடுகளின் பட்டியலில் இருக்கின்றன. இவற்றில் நெதர்லாந்து, செக் குடியரசு, ஹங்கேரி, ஸ்வீடன் ஆகியவை கிண்ணத்தை வெற்றி கொள்ளவில்லை.

கடந்தகால உலகக் கிண்ண போட்டிகளை ஆய்வு செய்ததன்படி இம்முறை பிரேஸில், இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ் ஆர்ஜன்டீனா ஆகிய நாடுகளில் ஓர் அணியே கிண்ணத்தை வெற்றி கொள்ளும் வாய்ப்பை அதிகம் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

## தங்கக் கிண்ணம்



உலகக் கிண்ணத்தை மூன்று முறை வெல்லும் அணிக்கு நிரந்தரமாக அந்தக் கிண்ணம் வழங்கப்படுவது வழக்கம். இதன்படி, 1970 இல் மூன்றாவது முறையாக கிண்ணத்தை வென்ற பிரேசில் அணிக்கு 'ஜூல்ஸ் ரிமேட் கோப்பை' வழங்கப்பட்டது. இதன்பின் 1974 இல் உலகக் கிண்ணத்திற்காக 53 வடிவங்கள் பரிசீலிக்கப்பட்டதில், இறுதியாக இத்தாலியக் கலைஞர் சில்வியோ கஸ்ஸானிகா என்பவர் வடிவமைத்த கிண்ணம்தான் தற்போதைய கிண்ணமாக அமைந்துள்ளது. முழுவதும் தங்கத்தால் செய்யப்பட்ட இந்தக் கிண்ணம் 36 செ.மீ உயரமும் 4.9 கிலோ எடையும் கொண்டது. 2038 ஆம் ஆண்டு வரை நடைபெறும் உலகக்கிண்ணத்தில் வெற்றிபெறும் அணிகளின் பெயர்களை இதில் பொறிக்கமுடியும். இக்கிண்ணம் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்திடம் இருக்கும். வெற்றி பெறும் அணிக்கு தங்கமுலாம் பூசப்பட்ட மாதிரி வடிவிலான கிண்ணமே வழங்கப்படும்.

## உலகக் கிண்ணத்தில் சாதித்த அணிகள்



இதுவரை நடைபெற்ற 18 உலகக் கிண்ணப்போட்டிகளில் அதிகபட்சமாக 5 முறை கிண்ணத்தை வென்ற நாடு பிரேசில் ஆகும். 1958, 1962, 1970, 1994, 2002 ஆண்டுகளிலேயே அந்த அணி வெற்றியீட்டியிருந்தது. இத்தாலி,1934, 1938, 1982, 2006 ஆகிய ஆண்டுகளில் கிண்ணத்தை வசப்படுத்தியுள்ளது. ஜேர்மனி 1954, 1974, 1990 ஆண்டுகளில் வென்றிருக்கிறது. உருகுவே இரண்டு தடவைகள் (1930, 1950 ஆம் ஆண்டு) ஆர்ஜன்டீனா இரண்டு தடவை (1978, 1986), இங்கிலாந்து ஒரு தடவை (1966), பிரான்ஸ் ஒரு தடவை (1998) வென்றுள்ளன.

## நழுவிய வாய்ப்புக்கள்




இதுவரை நடைபெற்ற உலகக்கிண்ண கால்பந்தாட்டத்தில் ஆசியா, ஆபிரிக்கா, ஓசியானா நாடுகள் கிண்ணத்தை வென்றதே இல்லை. 1966 இல் இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ணத்தில் ரஷ்யாவும் 2002 இல் தென்கொரியா மற்றும் ஜப்பானில் கூட்டாக நடைபெற்ற உலகக்கிண்ணத்தில் தென்கொரியாவும் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன. ஆசியாவிலிருந்து அரையிறுதி வரை தகுதி பெற்ற அணிகள் இவை மட்டுமே. ஆனால், இந்த அணிகள் துரதிர்ஷ்டவசமாக இறுதி வரை முன்னேற முடியவில்லை. இதேபோல, ஆபிரிக்க அணிகளில் ஒன்றுகூட இதுவரை அரையிறுதி வாய்ப்பைப் பெற்றதே இல்லை.

## உலகக் கிண்ண விசேட துளிகள்..

* ஐந்து முறை உலகக்கிண்ணத்தை வென்றுள்ள பிரேஸில் அணி ஒருமுறைகூட சொந்த மண்ணில் நடைபெற்ற போட்டியில் உலகக்கிண்ணத்தை வெற்றி கொள்ளவில்லை.
* உருகுவே (1930), இத்தாலி (1934), இங்கிலாந்து (1996), ஜேர்மனி (1974), ஆர்ஜன்டீனா (1978) ஆகிய நாடுகள் சொந்த மண்ணில் வெற்றியீட்டியுள்ளன.
* அதிக கோல்கள் அடிக்கும் வீரர்களுக்கு தங்கக் காலணி வழங்கும் முறை 1930 ஆம் ஆண்டிலிருந்தே பின்பற்றப்படுகிறது.
* நாகரிகமாக விளையாடும் அணிகளுக்கு சிறந்த அணிக்கான விருது 1978 முதல் வழங்கப்பட்டு வருகின்றது.
* உலகக் கிண்ணத்தில் அதிக கோல் அடித்தவர் என்ற சிறப்புக்குரியவர் பிரேஸிலின் ரொனால்டோ ஆவார். 3 உலகக் கிண்ணப்போட்டிகளில் 15 கோல்களை இவர் அடித்துள்ளார்.
* 1982 பிரான்ஸ்-இங்கிலாந்து போட்டியில் பிரான்ஸ் வீரர் பிரையன் றொப்சன் 27 வினாடிகளில் அடித்த கோல்தான் உலகக் கிண்ணத்தில் மிக விரைவாக அடிக்கப்பட்ட கோல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 'சூரியன் ஒரு முழுக்கோளம் இல்லை'



## நாஸா தெரிவிப்பு

'சூரியன் கோள வடிவானது' என்ற கருத்து அண்மையில் நாஸா மேற்கொண்ட ஆய்வொன்றை அடுத்து தகர்க்கப்பட்டிருக்கிறது.

சூரியனின் கோளத்தன்மையை நாஸா விஞ்ஞானிகள் அண்மையில் துல்லியமாக அளந்துள்ளனர். இந்த அளவீட்டுப் பணிகளுக்காக Reuven Ramaty High-energy Solar Spectroscopi Imager எனும் விண்தொலைநோக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது.




சூரியனின் தீப்பிழம்புகளை ஆராய்வதற்காக 2002 ஆம் ஆண்டில் இந்த தொலைநோக்கி விண்ணுக்கு ஏவப்பட்டது. 'எக்ஸ்' கதிர்களையும் 'காமா' கதிர்களையும் பயன்படுத்தி இந்த விண்தொலைநோக்கி அளவீடுகளைச் செய்துள்ளது. நிமிடத்திற்கு 15 சுற்றுகள் வீதம் சுழலக்கூடிய இந்த விண்தொலைநோக்கி வழியாக சூரிய வட்டத்தையும் தீப்பிழம்புகளையும் கண்காணித்தபோதே, சூரியன் முழுமையான கோளம் இல்லை என்கிற உண்மை அறியப்பட்டுள்ளது. விண்மீன்களில் சூரியன் மட்டுமே மிக அதிகமான ஈர்ப்புவிசையைப் பெற்றிருக்கின்றது. சூரியனின் கோள வடிவம் 0.001 சதவீதம் என்று இதுநாள் வரையில் நம்பப்பட்டு வந்தது.

சூரியப் புள்ளிகள் தீவிரமாக இயங்கும் நாட்களில் சூரிய நடுக்கோட்டின் ஆரம் துருவ அச்சின் ஆரத்தைவிட சற்றுப் பெரியதாக இருக்கிறதாம். இதன்போது சூரியனைச் சுற்றிலும் பழத்தோல் போன்ற ஒரு பொருள் உருவாவதால், துருவப் பகுதிகளில் நசுங்கிப்போன கோளமாக சூரியன் தோற்றமளிக்கிறது. இந்த 'பழத்தோல் பிதுக்கம்' காரணமாகவே சூரியன் ஒரு முழுமையான கோளம் இல்லை என்கிற கருத்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.




வி

ண்வெளி என்பது விசித்திரமான சூழலைக்கொண்டது. இதனால், அங்கு உயிரினங்கள் வசிக்கவோ, தாவரங்கள் வளரவோ வாய்ப்பில்லை. எனினும், எதிர்காலத்தில் அங்கு குடியேற்றங்கள் நிகழலாம் என்ற எதிர்பார்ப்புக்கமைய, குடியேற்றவாசிகளின் பிரதான தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு தக்காளி, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, காட்டாமணக்கு போன்ற பல தாவரங்கள் இந்தப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளன. அதன்படி, இந்த செயற்கைச் சூழலில் குறித்த தாவரங்கள் நல்ல வளர்ச்சியையும் விளைச்சலையும் தருகின்றமை அவதானிக்கப் பட்டுள்ளது.

# விண்வெளியில் ஸ்ட்ரோபெரி விளைச்சல்





அத்துடன், அவை அதிக சுவைகொண்டதாக இருப்பதும் தெரியவந்துள்ளது.

இந்த வரிசையில், ஸ்ட்ரோபெரி செடிகளை விண்வெளியில் ஏனைய பயிர்களைவிட சுலபமாக வளர்க்கலாம் என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஏனைய தாவரங்களைவிட எளிதான பராமரிப்பு, குறைந்த செலவு என்பனவற்றின் அடிப்படையில் ஸ்ட்ரோபெரி செடியை விண்வெளியில் வளர்க்கலாம் என அமெரிக்க பெர்டியூ பல்கலைக்கழக ஆய்வாளர் கேரி மிட்செல் தெரிவித்துள்ளார்.

விண்வெளியில் செயற்கை சூழலிலேனும் தாவரங்களை வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஆராய்ச்சியாளர்கள் நீண்டகாலமாக ஈடுபட்டு வருகின்றனர்.



# டைட்டனில் உயிர்கள்

விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் சனிக்கிரகத்தின் மிகப்பெரிய துணைக்கோளான டைட்டனில் உயிர்வாழும் சாத்தியக்கூறுகள் இருப்பதைக் கண்டறிந்துள்ளனர். அத்துடன், அங்கு வாழ்வதாக எதிர்பார்க்கப்படும் உயிரினங்கள் டைட்டனின் வளிமண்டலத்திலிருந்து வெளிப்படும் ஹைட்ரஜனை சுவாசிப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சனிக்கிரகத்தில் ஆராய்ச்சிகளைச் செய்து வரும் கெசினி விண்கலத்தினாலேயே இந்த ஆய்வு சாத்தியப்பட்டுள்ளது. அத்துடன், டைட்டனில் மிதேன் (METHANE) வாயு இருப்பதாகவும் அங்கு வாழும் உயிரினங்கள் மிதேனை ஆதாரமாகக்கொண்டே வாழ்வதாகவும் கெசினியின் அண்மைய ஆய்வுகளை அடுத்து தெரியவந்துள்ளது. இதன்மூலம் நமது சூரியக்குடும்பத்தில் பூமியைத் தவிர துணைக்கோளொன்றிலும் உயிர்கள் வாழலாம் என்று கருதப்படுகின்றது.

# சூரியனில் கருமபுள்ளிகள்...?

*எலுமிச்சம் பழத்தின் மேல் ஏதோ கரும்புள்ளிகள் இருப்பதுபோல் தோன்றும் இவ்விரு படக் காட்சிகளும் என்னவாக இருக்கும் என்று யோசிக்கிறீர்களா?*

*சூரியனுக்கு முன்பாக சர்வதேச விண்வெளி நிலையமும் அட்லாண்டிஸ் விண்கலமும் இருக்கும் காட்சிகளே இவ்வாறு படம்பிடிக்கப்பட்டுள்ளன. இதன்படி, முதலாவது படத்தில் சர்வதேச விண்வெளி நிலையம் சூரியனுக்கு முன்வரும்போதான காட்சியையும் இரண்டாவது படத்தில் அட்லாண்டிஸ் விண்கலம் சூரியனுக்கு முன்னால் வரும் போதான காட்சியையுமே இங்கு காண்கிறீர்கள்.*



*விண்வெளிப் புகைப்பட நிபுணர் தியரி லிகால்ட் என்பவர் தான் இந்தப் படங்களை எடுத்துள்ளார். மற்றொரு விண்வெளி ஓடத்தில் பயணித்தவாறே இந்தப் படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. புகைப்பட நிபுணர் பயணித்த விண்கலமும் அட்லாண்டிஸ் விண்கலமும் ஒன்றையொன்று கடந்து செல்லும் 54 விநாடி நேரத்திலேயே இந்நிகழ்வு சாத்தியப்பட்டுள்ளது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது வெளியாகும் 'விஜய்' இதழ்களில் ஏதோ ஒரு முன்னேற்றம் காணப்படுகின்றது. அத்துடன், 'விஜய்'யில் இன்னும் பல போட்டிகளையும் இணைத்துக்கொள்ளவும்.

**-எஃப்.ஷம்லா, தரம்-11A, அஸ்-ஸபா க.வித்., மாத்தறை.**

'சமுத்திர ஜீவியம்' பார்த்து பல தகவல்களை அறிந்துகொண்டேன். சீகிரியா கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றை தெளிவாக விளங்கிக்கொண்டேன். அத்தோடு, குறுக்கெழுத்துப் போட்டியை மிக விரைவில் ஆரம்பித்தால் என் போன்ற மாணவர்களின் அறிவை மேம்படுத்த இலகுவாக அமையும்.




**-சாலிஹ் எம்.றியாழ், சுங்காவில்.**

இவ்விதழில் வெளிவந்த அனைத்தும் வரவேற்கத்தக்கதாகவும் பயனுடையதாகவும் அமைந்திருந்தன. குறிப்பாக, 'சமுத்திர ஜீவியம்' எனும் கட்டுரை மக்களின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடியதாக அமைந்தது. தவிர, வாசகர்களின் சிறுகதை எழுதும் திறமையை வெளிப்படுத்தும் வகையில் அவர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்கினால் சிறப்பாக இருக்கும்.

**அன்ஸப் நுஸ்ஹா, தரம்-10G, மஹ்மூத் ம.கல்., கல்முனை.**

★ ***வாசகர்களின் சிறுகதைகள் விஜய்யில் ஏற்கனவே பிரசுரமாகியுள்ளன. தரமான சிறுகதைகளுக்கு 'விஜய்'யில் என்றும் களம் வழங்கப்படும்.*** ***(ஆ-ர்)***

'விஜய்'யின் அனைத்து விடயங்களும் மாணவர்களின் பாடத்திட்டத்திற்கு மிகவும் பொருத்தமாக இருக்கின்றன. விஜய் மேலும் முன்னேற வேண்டும் என்பதே மாணவர்களாகிய எமது அவாவாகும்.

**-அஸ்மா, சுமையா, சிப்னா, தரம்-6D, களு/அல்-ஹம்றா ம.வித்., தர்கா நகர்.**

சமுத்திர சூழல் தொகுதி எதிர்கொள்ளும் அச்சுறுத்தல் தொடர்பான கட்டுரை சிறப்பாக இருந்தது. சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினம், சீகிரியா கண்டுபிடிக்கப்பட்ட வரலாறு என்பன தெளிவாகவும் விரிவாகவும் எழுதப்பட்டிருந்தன.

**ஏ.ஏ.எஃப்.இல்மா, வெலிகம.**




'சர்வதேச சமுத்திர தினம்', 'சீகிரியா' பற்றிய கட்டுரைகள் சுவாரஸ்யமாக இருந்தன. அத்துடன், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அதிக தகவல்களை அள்ளி வழங்கியிருந்தது. அனைத்தும் பிரமாதம். ஆனால், சிறிய குறைபாடொன்றை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அதாவது, 2-12 வரை யான பக்கங்களில் ஒவ்வொரு மூலையிலும் அச்சுப்பதிவு தெளிவில்லாமல் இருந்தது. எனவே, அவற்றைக் கவனித்தால் சிறப்பாக அமையும்.

**எம்.எஸ்.எம்.றாசிக் (ஆசிரியர்), அ/மனாருல் உலூம் ம.வித்., கம்பிரிகஸ்வெவ.**

★ ***தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஏற்பட்டிருந்த அந்த தவறுக்கு வருந்துகிறோம். தவறை சுட்டிக்காட்டியமைக்கு நன்றி. இனிவரும் காலங்களில் அவ்வாறான தவறுகள் நிகழாமல் இருக்க இயன்றளவு வழி செய்கின்றோம்.*** ***(ஆ-ர்)***

சிறிய தகவலாக இருந்தாலும் பெரிய பயனைத் தந்தது 'பொது அறிவு'. 'இந்தியாவின் இரும்பு மனிதன்' பற்றிய தகவல் ஆச்சரியப்பட வைத்தது. 'விவாத மேடை'யில் இடம்பெறும் கருத்துக்கள் சிந்திக்கவும் தெளிவுபடவும் வைக்கின்றன. 'ஓவியம் வரைவோம்' பகுதி அனைத்து வயதினருக்கும் பயனளிக்கக்கூடியது. மொத்தத்தில் 'விஜய்' பிரமாதம்.

**- செ. மலரினி, பருத்தித்துறை.**

இந்த இதழில் (23.06.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 30.06.2010.

**அனுப்ப வேண்டிய முகவரி:**



**வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.**



## அறிவுக்கு விருந்து 263 விடைகள்

**போட்டி: 04**

1. ***சரணாலயம்***
2. ***நிர்க்கதி***
3. ***பின்னணி***

**போட்டி: 05**

1. ***ஸ்பெய்ன்***
2. ***இங்கிலாந்து***
3. ***லியனாடோ டாவின்சி***
4. ***அடம் ஸ்மித்***






**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.06.30 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 266**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**


## கீழுள்ள தரவுகளுக்கேற்ப கட்டங்களைப் பூர்த்தி செய்க — 3




| Across | Down |
|---|---|
| 1. 137 + 101 + 198 | 1. 260 + 202 |
| 3. 591 + 354 | 2. 369 + 259 |
| 5. 55 + 66 + 62 + 79 | 3. 684 + 245 |
| 6. 120 + 148 | 4. 273 + 239 |
| 8. 566 + 356 | 7. 448 + 193 |
| 10. 356 + 555 | 9. 145 + 77 |
| 12. 429 + 293 | 10. 134 + 202 + 178 + 413 |
| 14. 423 + 222 | 11. 47 + 39 + 37 + 45 |
| 15. 231 + 256 + 261 | 12. 255 + 504 |
| 16. 325 + 304 + 315 | 13. 68 + 67 + 99 |

## பொருத்தமான இளமைப் பெயருடன் இணைக்க — 5

| | |
|---|---|
| 1. பலா | 1. கச்சல் |
| 2. தென்னை | 2. நுங்கு |
| 3. வாழை | 3. குரும்பை |
| 4. பனை | 4. மூசு |

## சரியான எண்ணிக்கையில் வட்டமிடுக — 1




4 5 6 7

## பிழைகளைத் திருத்துக — 4

1. dispyte (வெறுப்பு) - ..........................
2. meriner (மாலுமி) - ..........................
3. agriment (ஒப்பந்தம்) - ..........................
4. rumur (வதந்தி) - ..........................

## தரையில் பயணிக்கும் போக்குவரத்து சாதனங்களில் √ அடையாளமிடுக — 2



## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 263 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ஹோராஹ் நஸ்மி, 312, யோனகபுர, திக்குவெல்லை.

**போட்டி: 02**
ஜெயனி சஞ்சு, 56, உனம்புவ வீதி, கம்பளை.

**போட்டி: 03**
த.மாதங்கி, 66, 2 ஆம் குறுக்குத் தெரு, வவுனியா.

**போட்டி: 04**
ஏ.ஆர்.எம்.ஷாமில், 28/5, நிமல் வீதி, கொழும்பு-04.

**போட்டி: 05**
ஆஷீக் சாதிர்,
374 A/1, உடையார் வீதி, சாய்ந்தமருது.

**பாராட்டுப் பெறுவோர்:**

- ச.கிருத்திகா, அல்வாய் தெற்கு.
- என்.எஃப்.நஸீரா, கம்பளை.
- பா.நுஸ்ரா, கல்முனைக்குடி-02.
- வ.சிவமலர், நுவரெலியா.
- தௌபீக் முஸத்திக், மூதூர்-01.
- என்.ஜெனீட்டா, தெஹியோவிட.
- த.சாளினி, அச்சுவேலி.
- இஸ்கி அஹமட், காத்தான்குடி-05.
- எம்.சப்கத், மருதமுனை-03.
- எம்.ஐ.ரஸ்மி, ஹட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ராஜ பரம்பரையினரின் பெரிய அரண்மனை

உலகிலேயே ராஜ பரம்பரையினர் வசிக்கும் மிகப்பெரிய அரண்மனையாக இங்கிலாந்திலுள்ள வின்சர் (Windsor Castle) அரண்மனை திகழ்கின்றது. இங்கிலாந்து மகாராணியின் மூன்று அரண்மனைகளில் இதுவும் ஒன்றாகும்.

ஆயிரம் வருடம் பழைமைமிக்க இந்தக் கோட்டை, ராஜரிக வாழ்வுக்கு ஏற்ப அரண்மனையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதுடன், இதன் நிலப்பகுதி 484,000 சதுர அடியையும் கொண்டுள்ளது.

லண்டனிலுள்ள 'பக்கிங்ஹாம்' மாளிகை (Buckingham Palace) எடின்பரோவிலுள்ள 'ஹொலிருட்' மாளிகை (Holyrood Palace) என்பவற்றுடன், இந்த 'வின்சர்' அரண்மனையும் பிரிட்டிஷ் அரசகுடும்பத்தின் ஓர் உத்தியோகபூர்வ வாசஸ்தலமாகத் திகழ்கின்றது. இரண்டாம் எலிசபெத் மகாராணியார் வருடத்தில் பல வார இறுதி நாட்களை தமது தனிப்பட்ட மற்றும் பதவி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்காக இந்த அரண்மனையில் கழிக்கிறார். இவரின் ஏனைய மாளிகைகளான 'சந்ரிங்கம்' இல்லம் (Sandringham Home) 'பெல்மோரல்' மாளிகை (Balmoral Castle) என்பனவும் இந்த அரச குடும்பத்தினரின் தனிப்பட்ட இல்லங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கற்கால மனிதர் வாழ்ந்த குகைகள்



இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் ரெய்சன் மாவட்டத்தில் காணப்படும் 'பிம்பேட்கா' (Bhimbetka) என்று அழைக்கப்படும் குகைகள் கற்கால மனிதர்கள் வாழ்ந்தவை என்று நம்பப்படுகிறது. இக்குகைகளில் காணப்படும் ஓவியங்கள் கற்காலத்தைச் சேர்ந்தவை என்றும் இவை 30,000 வருட பழைமை மிக்கவை என்றும் தெரிகிறது. பிம்பெட்கா (Bhim-bet-ka) என்றால் பீமன் அமர்ந்திருந்த இடமென்று பொருள்படுகிறது. இதன்படி மகாபாரதத்தில் வரும் பஞ்சபாண்டவ சகோதரர்களில் ஒருவரான பீமன் இங்கு அமர்ந்திருந்ததாகவும் ஒரு நம்பிக்கை நிலவுகிறது.

இக்குகைகளில் காணப்படும் ஓவியங்களிலிருந்து கற்கால மனித வாழ்வுடன் தொடர்புடைய தடயங்களைகாணமுடிவதுடன், சில ஆய்வாளர்களின் கருத்தின்படி, இங்குள்ள சில குகைகளில் ஒரு லட்சம் வருடங்களுக்கு முன்பிருந்தே மனிதர் வாழ்ந்துள்ளதாகவும் தெரிகிறது.

இக்குகைகள் அமைந்துள்ள பகுதி முழுவதும் அடர்ந்த மரம், செடி, கொடிகளால் சூழப்பட்டுள்ளன.

பிம்பேட்கா பகுதி 1888 இல் இந்திய தொல்பொருள் பதிவில் உள்ளூர் ஆதிவாசிகளிடமிருந்து பெற்ற தகவல்களின்படி, இது பௌத்த பகுதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பின்னர் 1957 ஆம் ஆண்டு தொல்பொருள் ஆய்வாளரான வி.எஸ்.வாகன்சர் என்பவர் போபாலுக்கு புகையிரதத்தில் செல்கையில் இந்த மலை வடிவங்களைக் கண்டுள்ளார். அவர் ஏற்கனவே ஸ்பெய்ன் மற்றும் பிரான்ஸ் நாடுகளில் கண்ட மலைகளின் தோற்றங்களில் இவை அமைந்திருந்ததைக் கண்டு ஒரு தொல்பொருள் ஆய்வுக் குழுவுடன் இப்பகுதிக்குச் சென்று சரித்திர காலத்துக்கு முற்பட்ட பல பாறை வசிப்பிடங்களைக் கண்டுபிடித்துள்ளார். அதுமுதல் இப்பகுதியில் 700 க்கும் மேற்பட்ட குகை வசிப்பிடங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.



# அன்பும் மன்னிப்பும்



ஒரு சமயம் புத்தரும் அவருடைய சீடர்களும் காட்டில் உறங்கிக்கொண்டிருந்தபோது, ஒரு திருடன் அங்கு வந்து அங்கிருந்த கிண்ணத்தில் ஒன்றை எடுத்துக்கொண்டு மெதுவாக வெளியேறினான். அப்போது அவனது கால், புத்தரின் காலில் பட்டு இடறியபோது, புத்தர் விழித்துக்கொண்டார். சற்றுத் தடுமாறிய அத்திருடன், சமாளித்துக்கொண்டு வேகமாக வெளியே ஓடினான்.

யாரோ ஒருவன் தமது கிண்ணத்தை எடுத்துக்கொண்டு ஓடுவதைப் பார்த்த புத்தர் உடனே தன் அருகில் படுத்திருந்த சீடனைத் தட்டி எழுப்பி தமது துணி மூட்டையிலிருந்த ஓர் அழகிய கிண்ணத்தை எடுத்து அவனிடம் கொடுத்து, ''யாரோ ஒருவன் நம்மிடமிருந்த ஓட்டைக் கிண்ணத்தை எடுத்துக்கொண்டு ஓடுகிறான். பாவம்.... அந்தக் கிண்ணம் அவனுக்கு எவ்வகையிலும் பயன்படாது. எனவே, நீ வேகமாக ஓடிச்சென்று இந்தப் புதிய கிண்ணத்தை அவனிடம் கொடுத்து விட்டு வா. இதோ.... இந்தப் பக்கம்தான் அவன் ஓடினான்' என்று கூறினார். நீண்ட நேரம் திருடனைப் பின்தொடர்ந்து ஓடிய சீடன் ஒருவாறு அவனைப் பிடித்துவிட்டான்.

''அப்பனே! சற்று நில்! நீ தூக்கிக்கொண்டு ஓடி வந்தது ஓட்டைக் கிண்ணம். அது எதற்கும் பயன்படாது. எனவே, அதற்குப் பதிலாக இந்தப் புதிய கிண்ணத்தை வைத்துக்கொள். என் குருநாதர்தான் இந்த விஷயத்தை உன்னிடம் கூறி இந்தக் கிண்ணத்தை கொடுத்துவிட்டு வரச்சொன்னார்'' என்று கூறிவிட்டு அக்கிண்ணத்தை அவன் கையில் திணித்தான். திருடனோ நெகிழ்ந்துவிட்டான். அவன் கண்களில் நீர் திரண்டது. புத்தரின் அன்பு அவனைத் தடுமாற வைத்தது. எனவே, அவன் சீடனுடன் நடந்து புத்தரை வந்தடைந்தான்.

''என்னை மன்னித்துவிடுங்கள்'' என்று கூறி அப்படியே அவர் கால்களில் விழுந்தான். புத்தர் அவனை வாஞ்சையோடு அள்ளி அணைத்தார். அப்போதே அவனும் அவரது சீடர்களில் ஒருவனாகிவிட்டான். அன்பு, மன்னிப்பு என்ற இந்த இரண்டு குணங்கள் மனிதர்களை முற்றாக மாற்றிவிடும் தன்மையுடையவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'Floppy' டிஸ்க் தயாரிப்பை 'சோனி' நிறுவனம் நிறுத்தவுள்ளதாம்!




**2011** ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் பின்னர் 'Floppy' டிஸ்க் தயாரிப்பையும் விற்பனையையும் முற்றுமுழுதாக நிறுத்திவிடப் போவதாக 'சோனி' நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கு முன்னதாகவே 'Apple' நிறுவனமே 'Floppy' டிஸ்க்கை இல்லாமல் செய்யும் பணியில் இறங்கியிருந்தது. எனினும், அதிக எண்ணிக்கையில் 'Floppy'யை தயாரிக்கும் நிறுவனம் என்ற வகையில் 'சோனி' நிறுவனம் எடுத்துள்ள தீர்மானமானது 'Floppy' டிஸ்கை முழுமையாக இல்லாமல் செய்துவிடும் என்றே கருதப்படுகின்றது.

1998 இல் 'Floppy' டிஸ்கின் விற்பனை 200 கோடியாக இருந்தது.2003 ஆம் ஆண்டிலிருந்து 'சோனி' தவிர்ந்த நிறுவன உற்பத்தியிலான கணினிகளில் 'Floppy' டிஸ்குக்கான 'டிரைவ்' இல்லாமலேயே தயாரிக்கப்பட்டமையால் 'Floppy'யின் விற்பனை சரிவடையத் தொடங்கியது. அதன்படி, 2006 ஆம் ஆண்டில் 'Floppy' விற்பனையானது 70 கோடியாக கீழிறங்கியது.

இந்த நிலையில் தற்போது சோனி நிறுவனமும் 'Floppy' தயாரிப்பை நிறுத்தப்போவதாக அறிவித்துள்ளது. 1.5 அங்குலம் கொண்ட 'Floppy' 1981 இல் சோனி நிறுவனம் தான் அறிமுகப் படுத்தியது. அடுத்த வருடம் தொடக்கம் இதன் தயாரிப்பு முழுமையாக கைவிடப் பட்டதும் 'Floppy'யானது வெறுமனே ஒரு அருங் காட்சிப் பொருளாகவே மாறி விடும் என்றே கருதப்படுகின்றது.

குறிப்பாக 'Floppy'யானது கூடிய அளவிலான தரவுச்சேமிப்புக்களை கொள்ளாத ஒன்றாக இருப்பதன் காரணமாகவே அதன் முக்கியத்துவம் இல்லாமல் போயுள்ளதுடன், கூடிய தரவுச் சேமிப்பைக்கொண்ட புதிய அறிமுகங்கள் வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 'சீடி'யின் வருகை

சீ.டியின் வருகையும் 'Floppy'யின் மவுசை குறைத்துள்ளது. 450 'Floppy' டிஸ்குகளில் உள்ளடக்கக்கூடிய தரவுகளை 'சீ.டி'க்குள் அடக்கிவிட முடியும் என்பதால் சீ.டிக்களுக்கான மவுசு கூடியுள்ளது.

இதேவேளை 'சீ.டி'யையும் தாண்டி 'Pendrive'வும் அறிமுகமாகியுள்ளதனால் அதன் சிறப்பு சீ.டியையும் மிஞ்சிவிட்டது எனலாம். அதாவது, விரலின் அளவே கொண்ட 4GB Pendrive ஒன்றின்மூலம் ஆகக் குறைந்தது 2500 'Floppy' டிஸ்குகளின் தரவுகளை சேமிக்கக்கூடிய தன்மை உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும், தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு இணையம் மற்றும் ஈமெயில் வசதிகளும் வியாபித்துள்ள இன்றைய காலகட்டத்தில் தகவல்களை/தரவுகளை இடத்திற்கிடம் கொண்டு செல்வதற்கு விசேட உபகரணங்கள் எதுவும் தேவையில்லை என்ற நிலையும் தோன்றியுள்ளது.

ஆயிரம்-இரண்டாயிரம் 'Floppy' களில் உள்ளடக்கக்கூடிய விடயங்களை இலவசமாகவே பரிமாறிக் கொள்ளக்கூடிய 'வெப்' சேவைகள் தற்போது பாவனையில் உள்ளன.

ஆக மொத்தத்தில் 'சோனி' நிறுவனம் 'Floppy' தயாரிப்பை நிறுத்துகின்றதோ இல்லையோ, 'Floppy'யின் அவசியம் இல்லாமல் ஆகியுள்ளமையால் அதன் இருப்பு அவசியமற்றதாகிவிட்டது என்றே கூறலாம்.

ஆக மொத்தத்தில் கணினி உலகில் அடிக்கடி புதிய அறிமுகங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதனால் பாவனையிலுள்ள பலதும் மிக விரைவாகவே பழையன என்ற நிலமைக்கு ஆளாகிவிடுவதைக் காணக்கூடியதாக உள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, ஜூன் மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday June 23, 2010.